# "ஆங்கிலமொழிமீதுள்ள ஆர்வம் தமிழின்மீதும ஏற்பட வேண்டும்"

# பதில் கல்விமா அதிகாரி கூறுகிறார்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★★

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

மலர் 1
இதழ்: 187
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் ஆவணி 2 ஜ: ஆகிர் 4 திங்கட்கிழமை [18-8-69]


யாழ்ப்பாணம், திங்கள்

''ஆங்கில மொழியில் நாடெங்கும் பிறந்துள்ள ஆர்வத்தை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால் இதே அளவு ஆர்வத்தை இன்று தமிழிலும் சிங்களத்திலும் காண முடியவில்லை. இதை மாற்றியமைக்க இதுபோன்ற விழாக்கள் உதவும் என்பதில் ஐயமில்லை.''

கல்வி அமைச்சின் பிரதி மாவித்தியாதிபதியான திரு. பி. பி. எம். சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்தார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அகில இலங்கைபாடசாலைகளில் தமிழ் தின விழா கடைசிநாள் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு சேனநாயக்கா மேலும் பேசியதாவது:-

சென்ற 6 மாத காலமாக பாடசாலைகளில் மொழித்திறன்களை வளர்க்க நாங்கள் எடுத்த முயற்சியின் பலாபலன்களும், விளைவுகளும் எவ்வளவு என்ற கணக்கெடுப்பே இவ் இறுதிப் போட்டிகளும் இவ்விழாவுமாகும்.

ஆங்கில மொழியில் இப்போது நாடெங்கணும் மிகுந்த ஆர்வம் பிறந்துள்ளது. இதேயளவு ஆர்வத்தை தமிழிலும் சிங்களத்திலும்காண முடியவில்லை. தங்கள் சொந்த மொழியாதலால் பெருமுயற்சியின்றியே திறமை வளரும் என பலரும் எதிர்பார்க்கிறார்கள். உண்மை அதுவல்ல. பரீட்சைகளை நடாத்துகின்ற எங்களுக்குத் தெரியும். சிங்களத்திலும் தமிழிலும்கூட தரவீழ்ச்சி காணப்படுகின்றது. இதை நிமிர்த்தவே இப்புதிய முறைகளும் புதியவழிகாட்டிகளும் அவற்றின் பேறாய் விளைவதைக் கணக்கெடுக்க வாரம்தோறும்அறிக்கைகளும் கோரப்படுகின்றன.

விஞ்ஞானக் கல்வியில் எல்லோரும் காட்டுகிற ஆர்வத்தை மொழிக்கல்வியில் இப்போது காண்பிக்கிறார்களில்லை. உதாரணமாக பாஒதல் என்றால் அழகாக காதுக்கு இனிமையாக இருந்தால் போதும் என்கிற எண்ணம் பரவலாகக் காணப்படுகின்றது. ஆனால் அக்கவிதையை யாத்த கவிஞன் எத்தகைய சந்தத்தை அமைத்தானே அதைப் பயன்படுத்தி அக்கவிதையின் உட்கருத்தை அடிநாதத்தைப் புலப்படுத்தும் வகையில் ஓதவேண்டும் என்பதை உணர்த்தவேண்டும்.

இன்னொன்று கையெழுத்தைப் பாருங்கள். டாக்டர்களுடைய கையெழுத்து மட்டும் தான் விளங்க முடியாதிருப்பதல்ல. பல்கலைக்கழகப் பயிற்சி பெற்றவர்களின் கையெழுத்துக்கூட தெளிவாயிருப்பதில்லை என்பது கண்கண்ட அனுபவம்.

ஆகவே இளமையில் கல் என்பதற்கமைய பாடசாலைகளில் இருக்கும் சிறார்களை ஐந்திலே வளைக்கும் முயற்சி தான் இத்திட்டம்.

இது 'சியவஸ' விழாவை ஒட்டி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வருடாந்த நிகழ்ச்சியாக இது அமைய வேண்டுமென்பதே கல்வி அமைச்சின் நோக்கம்.

## "தமிழ் தலைவர்களின் இழுபறியால் பாதிக்கப்பட்டவர்கள் மாணவர்கள்"

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்கலாநிதி சு.வித்தியானந்தன் பேசியதாவது:-

இன்று தமிழ்த்தலைவர்கள் மத்தியில் ஒற்றுமையில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மாணவர்களே.

இந்த நாட்டின் எதிர்காலச்சந்ததியினரான மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் தமிழ் பேசும் மாணவர்கள் என்ற ரீதியில் ஒற்றுமைப்பட்டிருப்பது மாணவ சமுதாயத்துக்கு மதிப்புக்கொடுக்கும் ஒரு சம்பவமாகும்.

இந்த விழா இலங்கை வரலாற்றில் முதலாவதாகும். சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டியதாகும். இதற்காக இதனை ஒழுங்குசெய்த கல்வி அமைச்சரையும் கல்வித் திணைக்களத்தையும் நாம் பாராட்டவேண்டும்.

வித்தியோதய பல்கலைக்கழக தமிழ்ப்பகுதி அதிகாரி திரு. உவைஸ் பேசுகையில், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு இப்பயிற்சியும், போட்டிகளும் வழிகாட்டியாக அமையும் என்றும் கூறினார்.

கல்வி அமைச்சின் சார்பில் திரு. ஜே. அருளையாவும், வடமாநில கல்வி அலுவலக சார்பில் வித்தியாதிபதி திரு. தணிகாசலமும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள். போட்டியில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன.

(கா நி)

# தேயிலை பிரசாரசபை கட்டடம் தீப்பற்றியது

## ரூபா ஒரு லட்சம் நஷ்டம்

## சதியென பொலிசார் சந்தேகம்

கோட்டை, திங்கள்

கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலைப்பிரச்சாரச்சபைக் கட்டிடத்தின் மேல் மாடிக்கட்டிடம் நேற்றுமாலை திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. இதனால் சுமார் ஒரு லட்சம்ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மற்றக் கட்டிடங்களுக்குத் தீ பரவாமல் சில மணி நேரங்களில் தீயணைக்கும் படையினரால் தீ அணைக்கப்பட்டது.

நேற்று மாலை திடீரென இங்கு தீப்பற்றியதன் காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இத்திவிபத்தினால் கட்டடத்தின் பெரும் பகுதிகள் சேதமடைந்துள்ளதாகவும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. கொள்ளுப்பிட்டி தேயிலைப் பிரசாரச்சபையில் ஏற்பட்ட தீவிபத்து சந்தேகத்துக்கிடமாகவிருப்பதாகப் பொலிஸ் தலைமைக்காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேயிலை பிரசாரச் சபை அதிபர் திரு. சில்வா

அரைமணி நேரத்தில் தீ எங்கும் பரவாமல் தடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இத் தீவிபத்துபற்றி சபை அதிபர் திரு சில்வா எந்த அபிப்பிராயமும் வெளியிடவில்லை.

பருத்தித்துறையில் நடந்த

## லொறி விபத்தில் மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

சைக்கிளில் சென்றுகொண்

லயத்தைச் சேர்ந்த வே சோமசுந்தரம் என்ற 17

## உபவேந்தர்சில்வா ராஜினமா

கோட்டை, ஞாயிறு

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் திரு. வால்வின் எ, சில்வா தனது ராஜினமாக் கடிதத்தைக் கல்வி அமைச்சர் திரு. ஐ எம் ஆர். ஏ. இரியகொலலைக்கு அனுப்பியுள்ளார். உடல் நலக்குறைவு காரணமாகவே அவர் தனது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

செப்டம்பர்வரை கடமையாற்றும்படி உபவேந்தரைக் கல்வியமைச்சர் கோரியுள்ளார். இதற்கு உபவேந்தர் உடன்பட்டு எவ்வளவு விரைவில் தனக்கு ஓய்வளிக்க இயலுமோ அவ்வளவு விரைவில் ஓய்வளிக்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளார்.

## நம்பூதிரிபாட் கி ஜேர்மனி சென்றார்

புதுடில்லி, ஆகஸ்ட்17

கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாட் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக இன்று புதுடில்லியிலிருந்து கிழக்கு ஜேர்மனிக்கு புறப்பட்டுச் சென்றார். அவரை வழியனுப்ப விமானநிலையத்துக்கு வந்திருந்த பிரமுகர்களில் மத்திய அமைச்சர்

நாட்டைவிட்டு

## வெள்ளையர் சென்றாலும் ஆட்சிமுறை மாறவில்லை

### — கிளிநொச்சி எம்.பி:

சொழும்பு, ஞாயிறு

வெள்ளையர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறினாலும் அவர்கள் விட்டுச் சென்ற ஆட்சி முறை போகவில்லை. அரசியல் அமைப்பு சட்டம் மாற்றப்பட்டு மீண்டும் ஆட்சி மன்றம் இக்கூட்டத் தொடருடன் கலைக்கப்பட்டு புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடைபெற வேண்டும்.

இவ்வாறு இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கிளிநொச்சி எம்.பி திரு. கா. பொ. இரத்தினம் கூறினார்.

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில், தமிழரசுக்கட்சி மக்கள் பிரதிநிதிகள் சபையின் 70 சதவீதமான தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறது இப்படியிருக்க தமிழரசுக் கட்சிவிலகிய பின் தேசிய அரசாங்கம் என்ற பெயரை அரசாங்கம் கொண்டிருப்பது அர்த்தமற்றது என்றார்.

திரு. இரத்தினம் பரந்தன் ரசாயனத் தொற்சாலை பற்றிக் குறிப்பிடுகையில் இதன் நிர்வாகம் பற்றி கண்டனம் தெரிவித்தார்,

மனைவியுடன் ஏற்பட்ட தகராறை தொடர்ந்து

## மகனையும் மகளையும் ஏலத்தில் விற்றார்

ஹக்மன, ஞாயிறு

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கோபமடைந்த ஒருவர் தனது மகனையும் மகளையும்

வாங்கிக்கொண்டு சென்றார்.

இவ்விற்பனையை அறிந்த சிறுவர் நல சேவை அதிகாரி ஒருவர் 1956-ம் ஆண்டில் சிறுவர் நல விதியின்படி ஒரு

## "தான் தோன்றித்தனமாய் கி. ச. தலைவர் நடக்க சட்டம் இல்லை"

மட்டுவில், ஞாயிறு

''அரசாங்க உத்தியோகத்தர்கள், அவரவர் கடமைகளைத் திறம்படச் செய்வ

அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமைகளில் குறுக்கிடவும், அவர்களுக்கு இடையூறாக இருந்து, அவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வு அறிவிக்கப்பட்டது. றிகொள்ளுப்பிட்டி தேயிலை ரசாரச்சபையில் ஏற்பட்ட பிவிபத்து சந்தேகத்துக்கிடமாகவிருப்பதாகப் பொலிஸ் மலைமைக்காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேயிலை பிரசாரச் சபை அதிபர் திரு. சில்வா உடனடியாக ஸ்தலத்துக்கு விஜயம்செய்து நிலைமையை நேரில்பார்வையிட்டார். தீயணைக்கும்படையினர் உடனடியாக ஸ்தலத்துக்கு அழைக்கப்பட்டனர்.

# லொறி விபத்தில் மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மாணவன் ஒருவன் லொறி மோதியதால் துடிதுடித்து மரணமானுர். இந்தச் சம்பவம் பருத்தித்துறையில் நடைபெற்றது.

நெல்லியடி மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வே. சோமசுந்தரம் என்ற 17 வயது மாணவனே இவ்வாறு மரணமானவராவார். இது சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் கலகரத்தினம் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை நடத்திஞர்.

ஸ்தல விசாரணை நடத்திய பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா லொறிச் சாரதியான வல்வெட்டித்துறையை சேர்ந்த ச. திருச்சிற்றம்பலம் என்பவரை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து இன்று பருத்தித்துறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

டாக்டர் செல்லத்துரை பிரேத பரிசோதனை நடத்திஞர். (கா. நி)

கைகலப்புசம்பவத்தால்

## பெண், உட்பட நால்வர் படுகாயத்துடன்ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

இரண்டு கோஷ்டியினருக்கிடையே நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட கைகலப்பொன்றில் ஒரு பெண் உட்பட நால்வர் படுகாயத்துக்குள்ளாஞர்கள். இச்சம்பவம் சங்கானை கிழக்கில் நேற்றிரவு நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த எஸ். கணபதி, அவரது மனைவியான சின்னக்குட்டி, வேலநாதன், மணியம்ஆகிய நால்வரும் கத்திக்குத்துக் காயங்களுடனும் கத்தி வெட்டுக் காயங்களுடனும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

சந்தேக நபர் எவரும் இன்னமும் கைதாகவில்லை. சங்கானைப் பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர் (கா நி)

கேரள முதலமைச்சர் திரு நம்பூதிரிபாட் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக இன்று புதுடில்லியிலிருந்து கிழக்கு ஜேர்மனிக்கு புறப்பட்டுச் சென்ருர். அவரை வழியனுப்ப விமானநிலையத்துக்கு வந்திருந்த பிரமுகர்களில் மத்திய அமைச்சர் திரு. கே. கே. ஷாவும் இருந்தார்.

திரு. நம்பூதிரிபாட்சுமார் இரண்டு மாதங்கள் கிழக்கு ஜேர்மனியில் தங்கி சிகிச்சை பெறுவர்.

## ஏழுபேரில் நால்வர் சித்தி

அராலி, ஞாயிறு

அராலி முருகமூர்த்வ வித்தியாசாலையிலிருந்து ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சையில் தோற்றிய 7 மாணவர்களில் நால்வர் சித்தியடைந்துள்ளனர், இவர்களுள் மூவர் பல்கலைக்கழக புகுமுகவகுப்புக்கு தகுதி பெற்றுள்ளனர்

# ... ஏலத்தில் விற்ருர்

ஹக்மன, ஞாயிறு

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகக் கோபமடைந்த ஒருவர் தனது மகனையும் மகளையும் நகருக்கு இழுத்துச்சென்று பொதுமக்கள் காண ஏலம் கூறிவிற்ற சம்பவம் இங்கு சமீபத்தில் நடைபெற்றது.

ஹக்மன நகரிலுள்ள அரசமரத்தடிச் சந்தியில் இந்த ஏலம்நடைபெற்றது. உரத்த குரலில் ஏலம் கூறிய இந்த நபர் மகனை 50 ரூபாவுக்கும் மகளை 80 ரூபாவுக்கும் விற்ருர். இச்சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் கூட்டம் ஆச்சரியமடைந்தது இப்பிள்ளைகளின் தந்தை உணர்ச்சிவசப்பட்டவராய் பணத்தைப் பெற்றதும் கடைக்குச் சென்று ஒரு போத்தல் மதுபானம், சிகரட், சாரம்ஆகியவற்றை வாங்கிக்கொண்டு சென்ருர்.

இவ்விற்பனையை அறிந்த சிறுவர் நல சேவை அதிகாரி ஒருவர் 1956-ம் ஆண்டில் சிறுவர் நல விதியின்படி ஒரு பிள்ளையை விற்பதோ வாங்குவதோ சட்டத்துக்குமாருன செயல் எனவும் இக்குற்றத்தைப் புரிபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

(கா நி)

## "தான் தோன்றித்தனமாய் கி. ச. தலைவர் நடக்க சட்டம் இல்லை"

மட்டுவில், ஞாயிறு

''அரசாங்க உத்தியோகத்தர்கள், அவரவர் கடமைகளைத் திறம்படச் செய்வதற்கு, ஒத்தாசையாகவும், உறுதுணையாகவும் இருந்து தத்தம் பகுதிகளை சிறப்புறச் செய்வதுதான் கிராமசபைத் தலைவர்களின் ஒழுங்கும்கடமையுமாகும் இதைத் தவிர அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமைகளில் குறுக்கிடவும், அவர்களுக்கு இடையூருக இருந்து, அவர்களை அவதூருகப் பேசவும், அவமானப்படுத்தவும். கிராம சபைத் தலைவர்களுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது!.''

(4-ம் பக்கம் பார்க்க)

வெள்ளாங்குளம் கொலைவழக்கில்

# மூன்ரும் எதிரிக்கு தூக்குத் தண்டனை

# 1-ம் எதிரிக்கு 5 வருட கடுழியம்; 2-ம் எதிரிக்கு 6 மாதம்

யாழ்ப்பாணம், திங்கள்

**வெள்ளாங்குளம் கொலைவழக்கில் 3-ம்எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது 1-ம் எதிரிக்கு 5 வருட கடுழிய சிறைத்தண்டனையும், 2-ம் எதிரிக்கு 6 மாத கடுழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.**

இவ்வழக்கில் நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தீர்ப்பளித்தார். சுமார் 40 நிமிட மந்திராலோசனை செய்த ஜூரிசபையினர் தங்கள் முடிவைத் தெரிவித்தனர்.

முதலாம் எதிரி படுகாயம் விளைவித்த குற்றச்சாட்டுக்கும், 2-ம் எதிரி காயம்விளைவித்த குற்றச்சாட்டுக்கும், 3-ம் எதிரி கொலைக்குற்றச்சாட்டுக்கும் குற்றவாளிகளாக ஜூரிசபையினர் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்

3-ம் எதிரியிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறீரா என்று கேட்டபோது 'யான் இந்தக் கொலையைச் செய்யவில்லை. அவ்வளவுதான்' என்று பதிலளித்தார்

1969-ம் ஆண்டு செப்டம்பர் 27-ம் திகதி சனிக்கிழமை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது

மன்ஞரிலுள்ள வெள்ளாங்குளம் என்னுமிடத்தில்67-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரம் என்பவரை, ஏரம்பு சோதிலிங்கம், படுகாயம் விளைவித்ததாகவும், ஏரம்பு கார்த்திகேசு காயம் விளைவித்ததாவும், ஏரம்பு சிதம்பரநாதன் கொலைசெய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் ஏ. சம்பந்தர் அட்வக்கேட் எஸ். ஸ்ரீநிவாசனின் உதவியுடனும், 2-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் கே வி.எஸ் சண்முகநாதன், 3-ம்எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ். தம்பித்துரை, புறக்டர்களான ஆர். விஸ்வநாதன், வி. ஏ. ஈ. பாலசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜராஞர்கள். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வக்கேட் வி. எஸ். ஆனந்தன் ஆஜராஞர். முடிக்குரிய தரப்பில் அட்வக் பிரியாந்த பெரேரா ஆஜராஞர்.

இவருக்கு 15 நாள் றிமாண்ட்

## 'சலஞ்ச்' சண்டைபார்க்கமேயரை அழைத்து பொலிஸிடம் அனுமதியும் கோரிஞராம்

மீதோட்டமுல்லை, ஞாயிறு

தமது மைத்துனருடன் குத்துச்சண்டை செய்வதற்கு சவால்விட்டுவிட்டு சண்டையைப் பார்ப்பதற்கு வருகை தரும்படி தெமட்டக்கொடை மேயருக்கும் பொதுமக்களுக்கும் அழைப்பு விட்டஒருவரைப்பொலிசார் கைதுசெய்தனர். இச்சம்பவம் தெமட்டக்கொடையிலிருந்து அறிவிக்கப்படுகிறது.

மனைவிமார்களுக்குள் ஏற்பட்ட மனஸ்தாபம் பகிரங்க குத்துச்சண்டைவரை வளர்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் இருவருக்குமிடையில் பலதடவை மோதல் ஏற்பட்டதாகவும்: இறுதிவரை ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் சண்டை செய்துவந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது பகிரங்க குத்துச்சண்டைக்கு ஒப்பந்தம் செய்துகொண்ட சந்தேகநபர், மதுபோதையில் பொலிசாரிடம் சென்று அனுமதி கோரிஞராம். அவரைப் பொலிசார் கைது செய்து நீதிபதிமுன் ஆஜர் செய்தனர். நீதிபதி 15 நாட்கள்வரை நந்தசேன என்ற அந்த சந்தேகநபரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (வி-நி)

## 'பொருளாதா சீர்குலைவுக்கு அரசியல்வாதிகளேகாரணம்

வவனியா, ஞாயிறு

இச் சிறிய தீவில் பலஅரசியல் கட்சிகள் தோன்றியுள்ளதனலேயே எமது பொருளாதார வளர்ச்சி சீர்குலைந்துள்ளது.

வவனியாவில் இலவச பால் விநியோக நிலையமொன்றை திறந்துவைத்துப் பேசிய வவனியாஆட்சிமன்ற அங்கத்தவர் திரு·ரி· சிவசிதம்பரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இங்குள்ள பல்வேறு இனத்தவர் மத்தியில் ஒருமைப்பாடு தோன்றுதல் அவசியம். ஒருமைப்பாடு தோன்றிஞல்தான் பொருளாதாரம் விருத்தியடையும் நாட்டில் பல்வேறு கட்சிகள் தோன்றியுள்ளமையால் அரசியல்வாதிகள் நாட்டின்நன்மையைக் கருதாது சுயநல வாதிகளாக அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு பாடுபடுகின்ருர்கள் என்று கூறிஞர்.

மக்கள் வகுப்புவாதத்தை உண்டுபண்ணத்தக்க கருத்துக்களைப் பிரசாரம் செய்யும் அரசியல்வாதிகளை ஆதரிக்கக்கூடாது என திரு சிவசிதம்பரம் வற்புறுத்திக் கூறிஞர்.

## ஜோதிடம் பார்க்க சென்றவர்கள் இரவை மரத்தில் கழித்தனராம்

### சாவகச்சேரி பொலிசில் புகார்

மட்டுவில், ஞாயிறு

ஜோதிடம் பார்க்கச்சென்றவர்களை ஒரு கோஷ்டி மறைந்திருந்து தாக்கியதாம். ஆடைகள் கிழிக்கப்பட்டு, காயத்துக்குள்ளான இருவர் இரவு முழுவதையும் ஒரு காட்டில் மறைந்திருந்து கழித்துவிட்டு நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸில் புகார் செய்தனர்.

நேற்றிரவு மட்டுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் நடராஜா, சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை ஆகிய இருவரும் இங்குள்ள வீடொன்றுக்கு ஜோதிடம் பார்க்கச் சென்றிருந்ததாகவும் அங்கு ஓர் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக ஒரு சந்தர்ப்பத்தில் பேசிக் கொள்ளப்பட்டதாகவும் அப்போதுவெளியே ஒட்டுக்கேட்டுக் கொண்டு நின்றதாகக் கூறப்படும் மூவர் ஜோதிடம் பார்க்கச் சென்றவர்களை வீட்டினுள் புகுந்து தாக்கிக் காயம் விளைவித்ததாகவும் தப்பி ஓடுவதற்கு முனைந்த இருவரும் இரவு முழுவதையும் காடு ஒன்றில் கழித்ததாகவும் அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வடக்கில் மழை

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதியில் நேற்று நண்பகல்மழை பெய்யத் தொடங்கியுள்ளது. சில மாதங்களுக்குப் பின்னர் நேற்று இங்கு மழைபெய்தது. யாழ்ப்பாணப்பகுதியில் பெய்த மழை பரவலாக எங்கும் பெய்தது.

இதுசம்பந்தமாக சின்னன் குஞ்சுதம்பி என்பவரைபொலிசார் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்தனர். சந்தேகநபர்களான மானுவலையைச் சேர்ந்த கணபதி சுப்பையா, கந்தையா ஆகியோரைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

# 80 ஆயிரம் கைத்தறியாளர் விரைவில் நன்மை பெறுவர்

## 'சலுசல' ஆரம்பிக்கவிருக்கும் புதிய தொழிற்சாலை

கோட்டை, ஞாயிறு

80 ஆயிரம் கைத்தறியாளர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் சலுசல நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சலுசலவிஞல் ஆரம்பிக்கப்படவிருக்கும் துணிகளுக்கான இறுதிச் சாயப்பூச்சுத் தயாரிக்கும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் கைத்தறியாளர்கள் நன்மை பெறுவார்கள்.

இத்தொழிற்சாலைக்கான இயந்திரத்தை வெளிநாடு ஒன்று சலுசலவுக்குக் கொடுத்துதவ முன்வந்துள்ளது.

இத்தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் சலுசலவிஞல் விற்பனைசெய்யப்படும் துணிகளின் விலைகளும் குறையுமெனத் தெரிவிக்கப்பட்டது.

மின்தறி நிலையங்களும் இதனுல் நன்மைபெறவிருக்கின்றன.

இறுதிச் சாயப்பூச்சுத் தயார்செய்யும் தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் அந்நியச்செலாவணியிலும் கணிசமான அளவு மிச்சப்படுத்தமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## அன்பளிப்பு

கோட்டை, ஞாயிறு

ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு முக்கியமான மருந்து வகைகளையும் வைத்தியஉபகரணங்களையும்சனிக்கிழமையன்று அன்பளிப்பாக் வழங்கியுள்ளது.

இந்த நவீன மருந்துவகைளும் உபகரணங்களும் மகாரகம புற்றுநோயாளர் ஆஸ்பத்திரியிலும் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் உபயோகிக்கப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதுவர் சுகாதார அமைச்சரிடம் உபகரணங்களையும் மருந்துவகைகளையும்துறைமுகத்தில்வைத்துக் கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

தேவன்ஸ் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கு வான் விற்பனையாளர், சைக்கிள் விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். தேவன்ஸ் இன்டஸ்றிஸ், 51, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 1326

### விற்பனைக்கு

மெயின் செற் றேடியோக்கள் விற்பனைக்குண்டு. சட்பங், எறஸ், வேகா, மார்கோனி போன்றவை. ஸ்ரீ கிருஷ்ணு றேடியோவேர்க்ஸ் பஸ் நிலையம் முன்பாக, சுன்ஞகம். 1319

கோப்பாய் தெற்கு இருபாலைச் சந்தியில் இருந்து கோண்டாவிலுக்குச் செல்லும் ரூேட்டுக்கு அருகாமையில் 10 பரப்புத் தோட்டம் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: செ, விஜயரத்தினம், கலைமணி ஒழுங்கை, சுட்டப்பிராய், யாழ்ப்பாணம். 1325

நல்லூர் அரசவீதியில் (வைத்தியர் அ. நடராசா வீட்டிற்கு முன்பாக) 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 10/4 A, 14 வது ஒழுங்கை, கொழும்பு 13. 1334

### கல்வி

வகுப்புக்கள்:

அஞ்சல் அதிபர் சுந்தியாளர் நியமனப் பரீட்சை உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் பரீட்சைகளுக்காககாலை 8—12 மணிவரை மாலை 12—4 மணிவரை இரண்டு வகுப்புக்கள் இலங்கைப்புவியியல் பட்டதாரியாலும் வேறு அனுபவம் வாய்ந்த பட்டதாரிகளாலும் நடத்தப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். எதிர்வரும் க. பொ. த. சாதாரணப் பரீட்சைக்கான விஞ்ஞானம் கலை, வர்த்தகம், சிங்களம் ஆங்கிலம் தையல் வகுப்புக்கள் பட்டதாரிகளால் கற்பிக்கப்படுகின்றன சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை, 1924-ல் ஆரம்பிக்கப்பட்டது. 1327

### நஷ்டஈடு

கோட்டை, ஞாயிறு

இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த கலாச்சார அதிகாரி ஒருவரின் 18 வயது மகனுன மைகேல் என்பவர் காரோட்டிச் சென்றபோது இக்காரினுல் மோதுண்டு மரணமான பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது. கலாச்சார அதிகாரி திரு. வில்லியம் பெனட் இதனை அறிவித்தார்.

இம்மாதம் 7-ம் திகதி இப்பரிதாப மரணம் ஏற்பட்டது.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி-கே. ஆர். விஜயா நடித்த
**கற்பகம்**

வல்வெட்டித்துறை
**ரஞ்சஞு தியேட்டர்**
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ராஜன் - புஷ்பலதா நடித்த
**கற்பூரம்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்

**குழந்தைக்காக**
கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

**ராணி**
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த
**எங்க ஊர் ராஜா**

**யாழ் வின்ஸர்**
தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம், ராஜன், புஷ்பலதா,


குடத்தனைக் கிராமசபை

### கேள்வி விளம்பரம்

குடத்தனைக் கிராமசபைத் தலைவரால் நாசர்கோவில் கரையூர் வீதி வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 30-8-69-ந் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10-ம் கட்டியதன் பேரில் 28-8-69-ந் திகதி பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

வேறு விபரங்கள் கந்தோர் நேரங்களில் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

வ. துரையப்பா,
தலைவர்,
குடத்தனைக் கிராமசபை.

இ. ச. கந்தோர்,
குடத்தனை,
17-8-69. 1709

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 18—8—69**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 நாட்டுப்பாடல், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 நிலையஒலிப்பதிவு, 7-35 மத்தாப்பு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்கேட்

# யாழ். தெரிவுக் கோஷ்டி மட்டக்களப்பில் மோதும்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் தெரிவுக் கோஷ்டி வரும் 19-ம், 20-ம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் உதைபந்தாட்டக் காட்சி போட்டியில் கலந்து கொள்ளவிருக்கிறது. யாழ். 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ. தேவராசா யாழ். கோஷ்டிக்கு காப்டனுக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருமலை, மட்டக்களப்புக் கோஷ்டிகளுடனும் கொழும்பு பிரபல கோஷ்டி 'சவுண்டர்ஸ்' உதைபந்தாட்ட கோஷ்டியுடனும் யாழ் தெரிவுக் கோஷ்டி மோதும்

யாழ். தெரிவு கோஷ்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர்கள் வருமாறு:

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ். ரி. பெர்ஞண்டோ (உதவி காப்டன்), டி. தேவகாந்தன், எஸ். பாலேந்திரா.

கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஏ. தேவராசா (காப்டன்), ஏ. டபிள்யூ. விமல்ராஜ், எல். ஜி போல், அன்ரன் சந்திரசேகரா.

பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜே. ஏ. அகஸ்தீன், ரி எம். நவப்ராஜ், எஸ். இராசையா.

குருநகர் யுனைட்டட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எல். வின்ஸஸ்லோஸ், ஏ. கிறேசியன்.

சென். மேரீஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரி. மரியதாஸ், அன்ரனி.

மயிலிட்டி புளூஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சோமேஸ்வரன்.

வல்வெட்டித்துறை யுனைட்டட்டைச் சேர்ந்த ஏ இரத்தினசிங்கம்.

வைக்கிங்ஸ்ஸைச் சேர்ந்த ஆர். தங்கராசா.

புனிதவளனைச் சேர்ந்த எம். பி. கோமேந்திரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். தெரிவுக் கோஷ்டி காரியதரிசியாக பி. பாலசுப்பிரமணியமும், உதவிக் காரியதரிசியாக ஜெ இம்மானுவலும், உபதலைவராக என். எஸ்தாக்கியும், பயிற்சியாளர்களாக [illegible] சற். சிங்கராயரும், பி. பத்மநாதனும். மத்தியஸ்தராக ஈ. க. குமரையாவும் தெரிவாகியுள்ளனர். (தே. நி.)



வடமராட்சிசுகாதாரவிழாவையொட்டி சுகாதாரப் பகுதியால் நடத்தப்பட்ட சிறந்த போசனசாலைப் போட்டியில் முதலாவதாகத் தெரிவுசெய்யப்பட்ட பருத்தித்துறை 'சபாஸ் கபே'யின் உரிமையாளர் திரு. சின்னத்தம்பி இராமலிங்கம், சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல், சேனநாயக்காவிடம் பரிசிலைப் பெற்றுக் கொள்கிருர். (படம்- கே. சூரியமூர்த்தி)

உதைபந்தாட்டம்

# யாழ். றெக்கிளமேசன் அனுராதபுரத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், திங்.

கல்வி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு அநுராதபுரத்தில் நடைபெறும் உதைபந்தாட்ட விழாவில் யாழ்ப்பாணம் றெக்கிளமேசன் சனசமூக நிலையக் கோஷ்டி கலந்து கொண்டு, அநுராதபுரம் தெரிவுக் கோஷ்டியை தோற்கடித்தது.

இப்போட்டி ஆரம்பமாகு முன் இருகோஷ்டி வீரர்களும், அநுராதபுரம் பொலிஸ் அதிபருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

போட்டி ஆரம்பமாகி 7 நிமிடங்களுக்குள் அநுராதபுரம் தெரிவுக் கோஷ்டியின் வலதுகரை வீரர் துரைசிங்கம் முதலாவது கோலை திடீரெனப் போட்டார். இதன்பின் றெக்கிளமேசன் கோஷ்டியின் மத்தியமுன்னணி வீரர் பெனடிக்ற் தலையால் அடித்து தமது கோஷ்டியின் சார்பில் முதலாவது கோலைப் போட்டார் இதனைத் தொடர்ந்து இக் கோஷ்டியின் இடதுகரை முன்னணி வீரர் தேவராசா இரண்டாவது கோலைப் போட்டார். இடைவேளையின் போது றெக்கிளமேசன் கோஷ்டி 2—1 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் அநுராதபுரம் கோஷ்டி [illegible] பத்து நிமிடங்கள் இருக்கும் போது, றெக்கிளமேசன் கோஷ்டியினரின் வாயுவேகமான தாக்குதல்களை அநுராதபுரம் கோஷ்டியினரால் சமாளிக்க முடியாமல் போகவே இக் கோஷ்டியினர் மேலும் இரு கோல்களை அடுத்தடுத்துப் போட்டனர். இவ்விரு கோல்களையும் றெக்கிளமேசன் கோஷ்டியின வலதுகரை முன்னணி வீரர் புலேந்திரனும், வலதுகரை உள் முன்னணி வீரர் போலும் மிகச்சாதுரியமாகப் போட்டனர். ஆட்ட முடிவில் றெக்கிளமசன் கோஷ்டி 4—2 கோல்களால் வெற்றி பெற்றது.

அநுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. மெறண்டா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (தே. நி)

...

### மரதன்ஓட்டம்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் சங்கம இரண்டாம் பிரிவினரின் மரவன் ஒட்டப்போட்டி வெள்ளிக் கிழமை அதிகாலை நடைபெறவிருக்கின்றது. தொடர்ந்து விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

......

### விளையாட்டுப்போட்டி

புலோலி, ஞாயிறு

வடதுள்ளை ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த 12-ம் திகதி நிலையத் தலைவர் திரு ஆ. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது.

### காங்கிரஸ்கிளை நிர்வாகிகள்

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் வடக்கில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்ணணிக்கிளை ஒன்று அங்குராற்பணம் செய்து வைக்கப்பட்டது.

மட்டுவில் வடக்கு தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்ணணிக் கிளையில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ஆறுமுகம் குணரத்தினம், செயலாளர்; க. கோபாலர் ருஸ்ணன், உபசெயலாளர்; ஆ. பரமேஸ்வரன், பொருளாளர்: சி. கெங்காதரன். 6-பேரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. ......

### தேவமாதா பெருநாள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை தேவமா

# "சந்திரனை வெற்றி கொள்ள காரணமாக இருந்தவை"

யாழ்ப்பாணம், திங்கள்

'மாணவர்களுக்குஉடலுறுதியும் கட்டுப்பாடும் விளையாட்டுப் போட்டிகளினுலும் கல்வி அறிவினுலும்தான் ஏற்படுகின்றன. சந்திரனில் முதல் அடி எடுத்து வைத்த ஆம்ஸ்ரோங்கூட கட்டுப்பாடும், அறிவும், உடலுறுதியும், அஞ்சாநெஞ்சமும் கொண்டிருந்த தால்தான் அவர் முயற்சிகளில் வெற்றி பெறக் காரணமாக இருந்தது. விளையாட்டுகளில் காட்டும் அக்கறை மாணவர் கல்வி அறிவிலும் காட்ட வேண்டும்.'

இவ்வாறு நாவற்குழி மகா வித்தியாலய வருடாந்த இல்லப் போட்டிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினுர்,

அவர் மேலும் பேசுகையில் அடுத்த ஆண்டுப்போட்டிகளை வித்தியாலயத்தின் புதிய மைதானத்தில் நடாத்த தாம் ஆவன செய்வதாக உறுதியளித்தார். நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. சோ. சடாட்சரம் வித்தியாலய கொடியை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து உரையாற்றினுர். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. என். ஆர். பாலசிங்கம் உட்பட பலர் பேசினர். போட்டிகளில் சுந்தரர் இல்லம் 179 1/2 புள்ளிகள் பெற்று முதலாவது இடம் வகித்தது. மற்றும் அப்பர்இல்லம் 176 1/2 புள்ளிகளும், சம்பந்தர் இல்லம் 127 புள்ளிகளையும் பெற்றன.

போட்டி முடிவுகளில் சாம்பியன்கள் விபரம்.

மேற்பிரிவு ஆண்கள் சம்பியன்- ஆ அமிர்தலிங்கம் (அப்பர் இல்லம்)

மேற்பிரிவு பெண்கள் சம்பியன்- மு யோகாம்பிகை (சுந்தரர் இல்லம்)

மத்திய பிரிவு ஆண்கள் சம்பியன்- வ சிவராசா (சம்பந்தர் இல்லம்)

மத்திய பிரிவு பெண்கள் சம்பியன்- த இராசேஸ்வரி (அப்பர் இல்லம்)

கீழ்ப்பிரிவு ஆண்கள் சம்பியன்- நா பஞ்சாட்சரம் (சம்பந்தர் இல்லம்)

கீழ்ப்பிரிவு பெண்கள் சம்பியன்- க கோமதி (அப்பர் இல்லம்) (தே நி)

கிளிநொச்சியில்

# நோய் பரவும் அபாயம்


கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியில் நிலவி வரும் கடும்வரட்சி காரணமாக இங்கு தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் [illegible] கடந்தபலமாதங்களாக இங்கு மழைபெய்யாததால் குடிநீருக்கு இங்குள்ளமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். உருத்திரபுரம், கல்மடு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ் வின்ஸர்

தினசரி 4 காட்சிகள்



ஏ. வி. எம், ராஜன்,
புஷ்பலதா,
சிவகுமார்,
கீதாஞ்சலி, நாகேஷ்,
அஞ்சலிதேவி

நடித்த

# பால்குடம்

அத்துடன் சந்திரனில் முதல் மனிதன் இறங்கி நடந்த அப்பல்லோ-11 காட்சியும் தமிழில் காண்பிக்கப்படுகிறது



கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — விஜயா (மட்டுநகர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — ராஜ் (நீர்கொழும்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி,
சோ, மனோரமா, கண்ணன்

நடித்த

# கணவன்

இசை: எம். எஸ். விஸ்வநாதன்

டைரக்ஷன்: ப. நீலகண்டன்


இரவு 6-15 நாட்டுப்பாடல், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 நிலையஒலிப்பதிவு, 7-35 மத்தாப்பு, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச்சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## முஸ்லிம் படித்த வாலிபர் சங்கம்

நல்லூர், வெள்ளி

யாழ் - முஸ்லிம் படித்த வேலையற்ற வாலிபர் சங்கம் சென்ற 12-ம் திகதி காலை 11 மணியளவில் மானிப்பாய் வீதியிலுள்ள ஒரு கட்டிடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து பேசிய யாழ் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம். ஜி. பஸீர் வேலையற்றவர் தொகை இப்போது அதிகரித்து வருவதாகவும் இந்த நிலையை மாற்றுவதற்கு திட்டமிட்ட முயற்சி மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

பின்வருவோர் சங்கஉறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- என். ஹமீட் (நிசாம்) உபதலைவர்- எஸ். எச். தாஸம், காரியதரிசி எம். எச். சலீம். உபகாரியதரிசி எம். நசீம், தனாதிகாரி எம். கமீம்.

நிர்வாகசபை பொறுப்பாளராக ஜனாப் எம். ஜி. பசீர் தெரிவு செய்யப்பட்டார்

## தொலைபேசி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை உபதபால் கந்தோருக்குத் தொலைபேசி வசதி செய்துகொடுக்கப்படாமையால் இவ்வூர் மக்கள் வேலணை, ஊர்காவற்றுறை போன்ற தூர இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.


**REGAL** JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya, Pre-Poya 4 Shows
Kim Novak, Peter Finch
in
THE LEGEND OF LYLAH CLARE
(Adults)



**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7, & 9-45
Poya, Pre-Poya 4 Shows
WAIT UNTIL DARK
(Adults Only)


தேவராசா இரண்டாவது கோலைப் போட்டார். இடைவேளையின் போது றெக்கிளமேசன் கோஷ்டி 2—1 கோல்களைப் பெற்றிருந்தது.

இடைவேளையின் பின் அநுராதபுரம் கோஷ்டி சற்று வேகமாக விளையாட முற்பட்டதினால் இக் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் நவரத்தினராசா இரண்டாது கோலைப் போட்டார். இரு கோஷ்டிகளும் சமமான கோல்களைப்பெற்ற பின் ஆட்டம் மிகவும் ரசிப்பையும், ரசிகர்களுக்கு ஆர்வத்தையும் கொடுத்தது. ஆட்டம் முடிவடைவதற்கு

யாட்டுக்கழகங்களின் சங்கம இரண்டாம் பிரிவினரின் மரவன் ஓட்டப்போட்டி வெள்ளிக் கிழமை அதிகாலை நடைபெறவிருக்கின்றது. தொடர்ந்து விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

......

## ஒழுங்கை சீர்கேடு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

வேலணை - ஊர்காவற்றுறை வீதியையும், சரவணை கிழக்கு வீதியையும் இணைக்கும் ஒழுங்கை ஒன்று பாவனைக்கு உதவாத நிலையிலுள்ளதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

6-பேரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. ......

# இன்றைய பலன்

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

ஆவணி மாதம் 2-ந் திகதி (18-8-69)

**மேஷம்-** வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும். நீண்டநாள் கனவு இன்று நனவாகும் சந்தர்ப்பமுமுண்டு.

**ரிஷபம்-** பொருள் கைவிட்டுப் போகும். மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்க நேரிடலாம். சிநேகித வழியால் சில தொல்லைகள் தோன்றக் கூடும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

**மிதுனம்-** அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணியஸ்தல யாத்திரை ஒன்றுக்குத் திட்டமிடப்படலாம். நண்பர்களின் நல்லுரைகள் உங்களைப் பரவசப் படுத்தும். தெய்வ சிந்தை மேலோங்கிநிற்கும்.

**கடகம்-** மனம் போல வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவிஉயர்வுக்கும் இடமுண்டு. பக்குவமான தினம்.

**சிம்மம்-** துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையையும்சோபிதமடையச்செய்யும். எதிர்பாராத விருந்தினர் வருகைக்கும் இடமுண்டு. ஒரு பெண்ணின் மூலம் அதிக ஆதரவு கிடைக்கலாம்.

**கன்னி-** இன்று உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கடமையாற்றுமிடத்தில் சதிவேலைகள் நடக்கக்கூடும். எதிலும் நிதானம் வேண்டும்.

**துலாம்-** ஆணவப் போக்கினால் நண்பர்களைப்பகைத்துக் கொள்ளுவீர்கள். மற்றவர்களின் குறுக்கு வழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டலாம். பணிவுடன் நடப்பின்வெற்றி உமக்கே.

**விருச்சிகம்-** நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம், வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. சிலர் புதியதுறைகளில் முதலீடுசெய்வதற்குவிரும்புவார்கள். இன்று சிறப்பான தினம்.

**தனுசு-** அன்னியர் சகவாசம்உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். சிறிய விடையத்திற்குக்கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றக்கூடும். அடக்கம் வேண்டும்.

**மகரம்-** வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமானம் பெருகும். ஆசிரியர்களாயின் அவர்கள் பணி சிறப்பாக இருக்கும். சிலருக்கு ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் பிறக்கும். பொன்னான தினம்.

**கும்பம்-** இதயம் இன்பத்தால் விம்மும். இல்லத்திலும் இனிமை தவழும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும். புத்திரவழியாலும் புகழ்வந்து சேரும் தெய்வத்தின் துணையும் கிடைக்கும்.

**மீனம்-** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்துக்கு இடமுண்டு. எனவே அடக்கத்துடன் நடக்கவும்.

## தேவமாதா பெருநாள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை தேவமாதா கோவிலிலும், கரவெட்டி தேவமாதா கோவிலிலும் கடந்த 12 நாட்களாக நடைபெற்று வந்த திருவிழா, வெள்ளிகிழமை சொரூபபவனியுடனும், பாடற்பூசையுடனும் முடிவடைந்தது. பருத்தித்துறைக் கட்டளைக்குரவர் வண எஸ். தேவராஜா, கரவெட்டி கட்டளைக்குரவர் வண எஸ். சிங்கராயர் ஆகியோர் பூசைகளை நடாத்தினர்.

## உற்சவம்

அளவெட்டி, திங்கள்

குப்பிளான்கற்கரைகற்பக விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாக இருக்கின்றது 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ் உற்சவ கொடியேற்று வைபவத்தை பிரம்மஸ்ரீ நடராசாக்குருக்கள், பிரம்மஸ்ரீ குமாரராஜக் குருக்களின் உதவியுடன் நடத்தி வைப்பார்.

0 0 0

யாழ்ப்பாணம், ஞாயிறு

அங்கணம்மைக்கடவை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. தொடர்ந்து பதினொரு நாட்களுக்கு உற்சவம் நடைபெறும். ......

## அப்பல்லோ-11 பற்றி உரை

அளவெட்டி, திங்கள்

யாழ் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர் திரு. எ. கருணாகரர் நாளை மாலை சுன்னாகம் பட்டினசபை நூல்நிலைய ஆராய்வுக் குழுவின் ஆதரவில் பட்டினசபை விளையாட்டரங்கில் நடைபெறும்கருத்தரங்கில் ''அப்பல்லோ 11'' என்னும் விடயம்பற்றிஉரையாற்றுவார்.

## புதியசெயலாளர்

சுழிபுரம், ஞாயிறு

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் தனாதிகாரியாக கடந்த மூன்று ஆண்டுகள் பணியாற்றிய திரு. எஸ். கே. தர்மலிங்கம், இவ்வாண்டு சபையின் கௌரவ செயலாளராக ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வலி. மேற்கு பலநோக்கு கூட்டுறவுச்சமாஜத்திலும் உப தலைவராக கடமையாற்றி வருகிறார்.

# நோய் பரவும் அபாயம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியில் நிலவி வரும் கடும்வரட்சி காரணமாக இங்கு தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. நல்ல நீரின்றி அசுத்தநீரை அருந்த வேண்டியுள்ளதால் இப்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றது. இதனால் தினமும் இவ்வூர் மக்கள் அரசினர் ஆஸ்பத்திரியையும் தனிப்பட்ட வைத்தியசாலைகளையும் தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

கடந்தபலமாதங்களாக இங்கு மழைபெய்யாததால் குடிநீருக்கு இங்குள்ளமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். உருத்திரபுரம், கல்மடு வட்டக்கச்சி, தர்மபுரம் போன்ற முடியேற்றத்திட்டங்களில் வாழும் மக்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். குடிநீருக்காக குடியேற்றவாசிகள் குடிபெயரவேண்டிய ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது. சமூகசேவைப்பகுதியினரால் குடியேற்ற பகுதி மக்களுக்கு கூப்பனுக்கு அரைக்கலன் குடிநீர் வீதம் இப்போது வழங்கப்பட்டுவருகிறது.

# நெற்செய்கையாளருக்கு பரிசு: திணைக்களம் அறிவிப்பு

சங்கானை, ஞாயிறு

விவசாய விசாலிப்பு சேவையினரின்ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்று மேற்படி இலாகாவினரால் நடாத்தப்படும் 1969-70-ம் ஆண்டிற்கான நெற் செய்கைப் போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பல பரிசில்களை வழங்க கமத்தொழிற் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் ரொக்கப் பரிசுகள் மூன்று வழங்கப்படும். முதலாம் இரண்டாம் மூன்றும் பரிசில்களைப் பெறுவோர்க்கு முறையே ரூபா 750, 300, 100, வழங்கப்படும். மாவட்ட ரீதியாக நடைபெறும் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு தங்கப் பதக்கம் ஒன்று வழங்கப்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக விளைவைப் பெறும் பதினெட்டு போட்டியாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும்.

விதைப்பு, பராமரிப்பு, அறுவடை போன்ற சகல செய்கைகளையும் தாமே பொறுப் பேற்றுக் கவனிக்கும் காணிச் சொந்தக்காரர்களும், செய்கையாளர்களும் மாத்திரமே இப் போட்டியில் பங்கு பற்றலாம்.

காரியாதிகாரி பிரிவுகளில் 1968-69-ம் ஆண்டிற்காக நடாத்தப்பட்ட பெரும் போகப் போட்டியில் முதல் இடத்தைப் பெற்றவர்கள் தற்போது காரியாதிகாரி பிரிவில் நடாத்தப்படும் முதல் இடத்தைப் பெறின் அவருக்கு ரூபா 750 வழங்கப்படமாட்டாது என்றும் அவரின் விளைவு விகிதம் மாவட்டப் பரிசுக்காக மதிப்பு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கு கொள்வோர் சகல விபரங்களையும் தங்கள் பகுதிகளில் உள்ள விவசாய விஸ்தரிப்புக்கள் கந்தோரில் அறிந்து கொள்ளக் கூடிய ஏற்பாடுகளை மேற்படி இலாகா பகுதியினர் செய்துள்ளனர்.

## நாளை இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம் திங்கள்

நல்லூர் கிராம சபையின் நாலாம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தல் நாளை நடைபெறவிருக்கின்றது. சி. கனகரத்தினம், மு பழனியப்பன், செ. வல்லிபுரம், த. கனகசபாபதி, எஸ். தனபாலசிங்கம் ஆகிய ஐவர் இவ் இடைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். (கா. நி.)

## சிரமதானம்

ஏழாலை, ஞாயிறு

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகநிலையத்தினர் மயிலிட்டிக்கிராமசபை எல்லைக்குள் உள்ள ஆள்விழுந்தான் ஒழுங்கைக்கு தார் ஊற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் இவ் வீதி இவர்களால் சிரமதான மூலம் திருத்தப்பட்டது.

## சிறப்புச் சொற்பொழிவுகள்

வேலணை, ஞாயிறு

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய திருவிழாக்காலங்களாகிய 10 தினங்களிலும் நால்வர்மடத்தில் பெரியபுராணச்சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய காங்கிரஸ்கட்சி நெருக்கடி

# நிஜலிங்கப்பா மீது அவநம்பிக்கை பிரேரணை: காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டகோரிக்கை

## இந்திராவைத் தண்டிக்கவும் சிலர் வற்புறுத்துகிறார்கள்

புது டில்லி, ஆகஸ்ட் 17

காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை யொன்றை விவாதிக்க அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் கமிட்டிக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யும் படி பஞ்சாப், சண்டிகார் பகுதிகளைச் சேர்ந்த 10 காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. நிஜலிங்கப்பாவுக்கு வேண்டுகோள்விடுத்திருக்கிறார்கள்.

திருமதி. இந்திரா காந்திமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் படி கோரியும் அவர் நடத்தை பற்றி ஆராய்பதற்கு காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டும்படியும் வேறுசில காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. நிஜலிங்கப்பாவைக் கோரியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நடைபெற்று முடிந்த சூட்டோடு திருமதி காந்தியை ஆதரிக்கும் கோஷ்டியினரும், அவருக்கு எதிரான கோஷ்டியினரும் ஒரு சாரார் மீது மறு சாரார் குற்றங்களைச் சுமத்துவதிலும் நடவடிக்கைகள் எடுக்கக் கோருவதிலும் இறங்கியுள்ளார்கள்.

பஞ்சாப், சண்டிகார் பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள், திரு. நிஜலிங்கப்பா ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக கடந்த சில வாரங்களாக மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர விருக்கிறார்கள் இதை விவாதிப்பதற்காக அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கமிட்டியைக் கூட்டும் படி அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

காஷ்மீர் முதல்வர் சாதிக் உட்பட காஷ்மீர் பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பேரும் இதே போன்ற கோரிக்கை யொன்றை விடுத்திருக்கிறார்கள். மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 3 காங்கிரஸ் முக்கியஸ்தர்களும் இம்மாதிரி வேண்டுகோள் ஒன்றை திரு. நிஜலிங்கப்பாவுக்கு விடுத்திருக்கிறார்கள்

திருமதி காந்தி ஜனாதிபதி தேர்தலின் போது சுதந்திரமாக வாக்களிக்கக்கோரி காங்கிரஸ் கட்சியின் கோட்பாடுகளுக்கு விரோதமாக நடந்து கொண்டார் என்றும் அவர் மீது நடவடிக்கை எடுக்கும் படியும் சில அங்கத்தவர்கள் காங்கிரஸ் அக்கிராசனரைக் கேட்டிருக்கிறார்கள்.

## வாக்குப்பெட்டிகள் யாவும் புதுடில்லிக்குவந்து சேர்கின்றன

புதுடில்லி, ஆகஸ்ட் 17

நேற்று பாரத ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்ததைத் தொடர்ந்து வாக்குப்பெட்டிகள்யாவும் சீல்வைக்கப்பட்டு புதுடில்லிக்குக் கொண்டுவரப்படுகின்றன. நேற்றிரவே உத்திரபிரதேசம், பீகார் ராஜஸ்தான் போன்ற இடங்களிலிருந்து விமானத்தில் வாக்குப் பெட்டிகள் கொண்டுவரப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன.

நேற்றைய தேர்தலில் பல மாநிலங்களில் நூற்றுக்கு நூறு வீதம் வாக்களிப்பு நடைபெற்றிருக்கின்றது. அநேகமாக வாக்களிக்கும் தகுதிபெற்றிருந்த அனைவருமே [illegible] எம். பி.க்கள் மொத்தம் 4107;

பூங்காவில்

## யு. எஸ். வீரரும் ரஷ்ய ராஜதந்திரியும்

நியுயோர்க், ஆக. 17

அமெரிக்க பூங்கா ஒன்றில் அமெரிக்க விமானப்படை கேணல் ஒருவரும் சோவியத் ராஜதந்திரி ஒருவரும் தாக்கப்பட்டது குறித்து அமெரிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

பூங்காவில் இரவு நேரத்தில் சோவியத் ராஜதந்திரியும் அமெரிக்க விமானப்படை அதிகாரியும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது பற்றியும் அமெரிக்கப் பொலிசார் ஆராயவிருக்கிறார்கள்.

## லண்டன் பயணமானார்

புலோலி, ஞாயிறு

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் கடமையாற்றிய திரு. அலின் பொன்னு ஜெயராசா விமான தொழில் நுட்ப பயிற்சிக்காக விமானம் மூலம் லண்டன் சென்றுள்ளார்.

இவர் லண்டனில் 6 மாத காலம் தங்கியிருந்து பயிற்சியில் ஈடுபடுவார். கொங்கொங்கில் இரு வருடம் விமான பொறியியல் பயிற்சியில் சித்தியடைந்துள்ள இவர் தற்போது உபகாரச் சம்பளம் பெற்று இங்கு சென்றுளார்.

ஹாட்லிக்கல்லூரியினதும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியினதும் பழைய மாணவர [illegible] தனையை [illegible] பாறிய தலைமை ஆசிரியர் [illegible]

கிறிஸ்தவர் போராட்டம்

## வட அயர்லாந்துக்கு மேலும் அதிக பிரிட்டிஷ் துருப்புகள்

## இதுவரை 8 பேர் பலி; 300 பேருக்குமேல் காயம்

பெல்பாஸ்ட், ஆக 17

வடஅயர்லாந்தில் றோமன் கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு மேலும் அதிக பிரிட்டிஷ் துருப்புகள் வடஅயர்லாந்தின் தலைநகரான பெல்பாஸ்டுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்றுவரும் கலவரங்களில் இதுவரை 8 பேர் பலியாகியிருக்கிறார்கள். 300க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். கலவரங்களைத் தொடர்ந்து சந்தேகத்துக்குரியவர்கள் என்ற முறையில் 20 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பக்கத்து நாடான ஐரிஸ் குடியரசின் பிரதம மந்திரி நியூயோர்க்கில் வடஅயர்லாந்து சம்பவங்கள்பற்றி ஐ. நா. பொதுக் காரியதரிசியுடன் பேசுவதற்குப் போய் இருக்கிறார். பாதுகாப்பு சபை நிகழ்ச்சிகளில் வட அயர்லாந்து சம்பவங்களை விவாதத்துக்கு சேர்த்துக் கொள்ளும்படி அவர் கோரவிருக்கிறார். ஆனால் வட அயர்லாந்து சம்பவங்கள் முற்றிலும் உள்நாட்டு விவகாரம் என்று பிரிட்டன் ஏற்கனவே அறிவித்திருக்கின்றது.

இதற்கிடையில் வட அயர்லாந்து பிரதமர் மேஜர் கிளார்க்கரை ஆலோசனைகள் நடத்த வரும்படி பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு வில்சன் அழைப்பு விடுத்திருக்கிறார். இதற்காக பிரதமர் வில்சன் தமது விடுமுறையை ரத்து செய்துவிட்டு லண்டன் வருகிறார்.

## வலது - இடது பலப்பரீட்சை: வெற்றி யாருக்கு?

புதுடில்லி, ஆகஸ்ட் 17

இந்தியாவின் நான்காவது ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நேற்று எதுவித அசம்பாவிதமுமின்றி அமைதியாக ஆனால் மிக விறுவிறுப்பாகநடந்துமுடிந்துவிட்டது. இத் தேர்தலின் பெறுபேறுகள் எதிர் வரும் புதன் கிழமை பின்னேரம் அல்லது இரவில் தெரிந்துவிடும். அதன் பிறகு இந்திய அரசியலில் குறிப்பாக ஆட் [illegible]

[illegible] நிர்ணயிக்கப்படும் நிலைமை ஏற்பட்டால் காங்கிரஸ் கட்சியின் அங்கீகரிக்கப் பட்ட வேட்பாளரான திரு சஞ்சிரெட்டியே வெற்றி பெறுவார் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

## உள்துறை அமைச்சர் சவான் பிரதமராவார்?

திரு. சஞ்சீவரெட்டி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுஅதன் அடிப்படையில் பிரதமமந்திரி திரு [illegible] போக்கு என்று கோஷ்டி பிரிக்கப் பட்டுள்ள காங்கிரஸ் காரர்களுக் கிடையில் மோதல் ஏற்படின் கட்சியைப் பிளவு படுத்தி [illegible]

## பொது வரவேற்பு அளிப்பர்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனைக் கிராமசபையின் புதிய தலைவர் திரு த சண்முகலிங்கத்துக்கும் வேலணை கிராமசபையின் புதிய தலைவரான திரு க சதாசிவத்துக்கும் சரவணைப் பொதுமக்களாலும் இங்குள்ள பொதுத் தாபனங்களாலும் பொது வரவேற் பொன்று அளிக்கப்படவுள்ளது.

0 0 0

வேலணை, ஞாயிறு

ஐந்து வருடங்களின் பின் மீண்டும் வேலணைக் கிராம சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. க. சதாசிவத்துக்குப் பொது வரவேற்பளித்துப் பாராட்டுவதென வேலணை இளங்கதிர் சனசமூகநிலையம் தீர்மானித்துள்ளது

## வீதியில் நின்ற சிறுவன் றிமாண்டில்

மல்லாகம், ஞாயிறு

வீதியில் அனாதரவான நிலையில் நின்ற எஸ் குலரத்தினம் என்ற 11 வயது சிறுவன் சங்கானைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டான். பொலிஸாரின் விசாரணையின்போதுபிரஸ்தாபசிறுவன் மின்னேரியைப் பிறப்பிடமாகவும், சங்கானை வீடு ஒன்றில் வேலைக்காரனாக அமர்த்தப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் இச் சிறுவனை வியாழக்கிழமை ஆஜர் செய்த போது மாஜிஸ்திரேட் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார் சங்கானைப் பொலிஸபர் மேலும் விசாரணை செய்கின்றனர்.

...

## சங்கானை சாதிக் கலவர வழக்கு

கோட்டை, ஞாயிறு

சங்கானை கலவர கொலை வழக்கு விசாரணை வருகிற மாதம் 19-ம் திகதி கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

[illegible] வாக்குப்பெட்டிகள் யாவும் சீல்வைக்கப்பட்டு புதுடில்லிக்குக் கொண்டுவரப்படுகின்றன. நேற்றிரவே உத்திரபிரதேசம், பீகார் ராஜஸ்தான் போன்ற இடங்களிலிருந்து விமானத்தில் வாக்குப் பெட்டிகள் கொண்டுவரப்பட்டுப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன.

நேற்றைய தேர்தலில் பல மாநிலங்களில் நூற்றுக்கு நூறு வீதம் வாக்களிப்பு நடைபெற்றிருக்கின்றது. அநேகமாக வாக்களிககும் தகுதிபெற்றிருந்த அனைவருமே தமது வாக்குகளைப் பதிவுசெய்திருந்தார்கள். எம். பி.க்கள் மொத்தம் 4107; எம். எல். ஏ.க்களில் 69 பேர் மட்டுமே வாக்களிக்கவில்லை. 98 சத வீதம் வாக்களிப்பு பொதுவாகப் பதிவாகியிருக்கின்றது

குஜராத், ஹரியானு, மைசூர் போன்ற ராஜ்யங்களில் நூற்றுக்கு நூறு வீதம் வாக்களிப்பு நடைபெற்றிருக்கின்றது. மத்திய பிரதேசத்தில் மழை காரணமாக 14 பேரால்வாக்களிக்கமுடியவில்லை. போபாவிலிருந்து நேற்று வாக்குப் பெட்டிகள் வருவதில் தாமதம் ஏற்பட்டது. விமானம் வருவதற்கு கால நிலை சரியில்லாததே இதற்குக் காரணம்.

புதுடில்லியில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கும் அறையைப் பொலிசார் காவல்புரிகின்றனர்கள். வேட்பாளர்களின் ஏஜண்டுகளும் அந்த அறையின் மீது ஒரு கண்வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# ரஷ்யப்பகுதியை சீனர் தம்வசப்படுத்த முயற்சி?

## அண்மைச்சம்பவம் பற்றி ரெட் ஸ்டார்' தகவல்

ஹாங்காங், ஆக. 17

சோவியத் எல்லைப் பிரதேசத்தில் மலைக்கணவாய் ஒன்றைத் தன்வசப்படுத்திக்கொள்ள சீனர்கள் முயற்சி செய்ததாக சோவியத் யூனியன் பத்திரிகையான 'ரெட்ஸ்டார்' குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

மலைப்பாங்கானப் பகுதியிலிருந்து கொண்டு இலகுவாக சோவியத் காவலர்கள் மீது தாக்குதல் நடத்த இலகுவாக இருந்ததால் இந்தப் பகுதியில் சீனர்கள் தாக்குதலை ஆரம்பித்தார்கள் என்று சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

சோவியத் பிரதேசத்தில் சில பகுதிகளைத் தம்வசப்படுத்திகொள்ளமுயற்சிமேற்கொண்டதாகவும் சோவியத் பகுதியில் புகுந்த சீனர்களின் சில டஜன் கணக்கானவர்களைக் கொன்று விட்டதாகவும் இரண்டு சீன அதிகாரிகள் கைது செய்யப்பட்டதாகவும் சோவியத் யூனியன் கூறியிருக்கிறது

அண்மையில் சிங்கியாங் எல்லையில் ஏற்பட்ட மோதலின் பின்னர் சீனர்கள் நாடு முழுவதும் சோவியத் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் தாக்குதல்:

# ஆஸ்பத்திரியில் அடையாள

## அணிவகுப்பு; நால்வர் பிணையில்

யாழ்ப்பாணம், திங்கள்

முன்னாள்பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைத் தாக்கியது சம்பந்தமான அடையாள அணிவகுப்பு ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. தற்காலிக மாஜிஸ்டிரேட் திரு. எஸ். கனகரத்தினம் இதனை நடத்தினார்.

காயமடைந்தவரான சின்னப்பு இராசதுரையை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல முடியாதிருந்ததால், டாக்டரினதும், பொலிசாரினதும் அனுசரணையுடன் அடையாள அணிவகுப்பை ஆஸ்பத்திரியில் நடாத்த யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனப் எம். ஜமீல் உத்தரவிட்டிருந்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த இராசதுரை நான்காவதுசந்தேகநபரைத் தவிர முதல்மூன்று சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து சந்தேக நபர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

முதலாவது சந்தேக நபருக்காக புரக்டர் ஜிம்மி இராசரத்தினமும், இரண்டாம், மூன்றும் சந்தேக நபர்களுக்காக புரக்டர் சி. பரமசிவம்பிள்ளையின் அனுசரணையுடன் வழக்கறிஞர் சி. நாகராஜாவும், நான்காம் சந்தேக நபருக்காக புரக்டர் எஸ். காங்கேயனும், பொலிஸ் தரப்பில் புரக்டர் ஆர். விசுவநாதனும் ஆஜராகியிருந்தார்கள்

மேல் விசாரணை அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது (கா நி)

# 'சைவத்தை வளர்த்தவர்கள்'

யாழ்ப்பாணம், திங்கள்

''அரசியல் ரீதியில் மதத்தை வளர்ப்பதாக கூறிக்கொள்ளும் ஒரு சிலரால் இந்நாட்டில் சைவம் வளர்ச்சி பெறவில்லை. சைவ மதத்தினை மட்டுமல்ல; தாய் மொழியான தமிழ்மொழியைக்கூட வளர்ப்பதில் வறியவர்களும், ஒதுக்கப்பட்ட மக்களுமே பெரும் பங்கு கொண்டுள்ளனர். தொடர்ந்தும்தமிழையும், சைவத்தையும்பாதுகாத்து வளர்க்க் அவர்களின் சேவை அவசியமானதாகும்.''

மானிப்பாய் பட்டினசபை உபதலைவர் திரு. எஸ். மார்க்கண்டு உடுவில்கிராமசபைத் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற காவடி ஆட்ட கலை நிகழ்ச்சியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்

இனுவில் அண்ணா விளையாட்டுக் சழகத்தின் சார்பில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு உடுவில் கிராம சபை அக்கிராசனர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

கிராமசபையின் அங்கத்தவர்களான திருவாளர்கள் ஈ. ஜோண்பிள்ளை, எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் காவடி ஆட்டம் ஆடியவர்கள், அண்ணுமார் ஆகியோருக்கு பொன்னுடை போர்த்தி கௌரவித்தனர்.

# இடமாற்றம்

சங்கானை, சனி

சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகவிருந்த இன்ஸ்பெக்டர் திரு. எச் பீ ஜெயசூரிய யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவுக்கும் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து சப் இன்ஸ்பெக்டர் திரு. விஜயத்திலக்க சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகவும் இம்மாதம் 15-ம்திகதியிலிருந்து இடமாற்றம்பெற்றுள்ளனர்.

0 0 0

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக்டமையாற்றி வந்த திரு. க. வேலாயுதபிள்ளை ஆகஸ்ட் முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

[illegible] சம்பளம் பெற்று இங்கு சென்றுள்ளார்.

ஹாட்லிக்கல்லூரியினதும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியினதும் பழைய மாணவரான இவர் குடத்தனையைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. அலின்பொன்னு தம்பதிகளின் மூத்த புதல்வர் ஆவார்.

# திருமலைச் செய்திகள்

### தற்கொலை

கணவனுடன் சண்டை பிடித்துவிட்டு தாய்வீடு சென்ற 20 வயது இளம் பெண் கிருமிநாசினிகுடித்து உயிரை மாய்த்துக் கொண்டார். இச்சம்பவம் மூதூரில் மணல்சேனை என்னும் இடத்தில் நடைபெற்றது.

### முதலிக்குளத்தில் காணி

முதலிக் குளக் காணி விநியோகத் திட்டத்தின் கீழ் காணி வழங்குவதற்காக பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பபத்திரங்களை திருக்கோணமலை மாவட்ட அரசாங்கஅதிபர்திரு. சோமபாலா குணதீரா கோரியுள்ளார். விண்ணப்பப் பத்திரங்கள் யாவும் 21-8-69 பிற்பகல் 4மணிக்கு முன்னதாக அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்படல் வேணடுமென்றும் இதற்கான காணிக்கச்சேரி ஒன்று இம் மாதம் 28ந் திகதி காலை 10 மணிக்கு முதலிக் குளம் தெற்கு 2 ம் கண்டத்தில் உள்ள சிங்களப் பாடசாலையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஜி. சி. ஈ. முடிவுகளில் மாற்றம்.

அண்மையில் வெளியாகிய க. பொ. த. ப பரீட்சை முடிவுகளில் பல குளறுபறுகள் இங்கு ஏற்பட்டிருக்கின்றன. கஞ்சிமடம் மகாவித்தியாலயத்தில் எல்லா மாணவர்களும் தமிழ்ப்பாஷைப் பாடத்தில் தோற்றியிருந்தனர். ஆனால் இங்கு கிடைத்தபெறுபேறுகளின் விபரங்களின்படி ஒருவருக்கேனும் தமிழ்ப்பாஷை முடிவுகள் தெரிவிக்கப்படவில்லை. மற்றும் பெருந்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் சரித்திர பாடத்தில் தோற்றாத ஒரு மாணவர் இப்பாடத்தில் சித்தி அடைந்துள்ளதாக முடிவு வந்துள்ளது. அதே வேளையில் இதே பாடசாலையில் இதே பாடத்திற் தோற்றிய இன்னொரு மாணவருக்கு அதன் முடிவு தெரிவிக்கப்படவில்லை. மற்றும் வரைதல் பாடத்தில் தோற்றிய பல மாணவர்களுக்கு முடிவுகள் தெரிவிக்கப்படாமலிருக்கையில் இப்பாடத்தை எடுக்காத பலர் இதில்சித்தி அடைந்துள்ளதாக முடிவுகள் வந்திருக்கின்றன.

[illegible] அமைதியாக ஆனால் மிக விறுவிறுப்பாக நடந்து முடிந்துவிட்டது. இத் தேர்தலின் பெறுபேறுகள் எதிர்வரும் புதன் கிழமை பின்னேரம் அல்லது இரவில் தெரிந்துவிடும். அதன் பிறகு இந்திய அரசியலில் குறிப்பாக ஆட்சிப்பொறுப்பிலுள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடத்தில் ஏற்கனவே உருவாகியுள்ள நெருக்கடியின் உச்சக் கட்டம் தெளிவாகலாம் என்று அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

இந்தத்தேர்தலில் திருமதி காந்தியின் ஆதரவையும் இடது சாரிகளின் ஆதரவையும் பெற்றுள்ள திரு வி வி கிரி வெற்றி பெறுவாராஞல் அது பிரதம மந்திரியான இந்திரா காந்திக்குக் கிடைக்கும் வெற்றியென்றே கருதப்படும். திரு கிரிக்கு வெற்றிகிடைக்க வேண்டுமாஞல் முதல் சுற்றிலேயே அவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தேர்ந்தெடுக்கப் படுவதாய் இருக்க வேண்டும். இல்லையெனில் இரண்டாது உசிதாச்சார வாக்குகளினுல் வெற்றி

# [illegible] உள்துறை அமைச்சர் சவான் பிரதமராவார்?

திரு. சஞ்சீவரெட்டி ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்பட்டுஅதன்அடிப்படையில் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி பிரதமர் பதவியைத் துறந்தால் அல்லது துறக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டால் திரு மொரர்ஜி தேசாய் பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஏற்கனவே அவர் மீது காங்கிரஸ் கட்சிக்குள் எதிர்ப்புக்கள் உண்டு என்பதுபோக நிதிஅமைச்சர் பதவியே அவரிடம் கொடுக்க மறுத்த திருமதி காந்தி சார்பான கோஷ்டியினர் அவரைப் பிரதமர்பதவியில் இருக்க விடுவார்கள்என்றும் எதிர்பார்க்க முடியாது மேலும் காங்கிரஸ் கட்சியின் அங்கீகரிக்கப் பட்ட சோஷலிஸக் கொள்கைகளை ஏற்று அமுல் நடத்தக் கூடியவரல்ல அவர் என்ற கருத்தும் ஏற்கனவே இருந்து வருகின்றது. இந்த நிலைமையில் முற்போக்குப்பிற்போக்கு என்று கோஷ்டி பிரிக்கப் பட்டுள்ள காங்கிரஸ் காரர்களுக் கிடையில் மோதல் ஏற்படின் கட்சியைப் பிளவு படுத்தித்துண்டு போட திருமதி காந்தி ஒருபோதும் இணங்கமாட்டார் என்பதும் தெளிவு. ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிப் பதன் மூலம் கட்சி பிளவு படாது ஒற்றுமைதான் பலப்படும் என்று அவர் ஏற்கனவே கூறியிருக்கிருர். எனவே மொரார்ஜி அல்லது அவாது கோஷ்டியில் ஒருவர் பிரதமராவதை இந்திரா எதிர்த்தாலும் கட்சி பிளவுபடுவதை விரும்பமாட்டார். இந்த நிலைமையில் இருதரப்பினருக்கும் 'நல்லபிள்ளையாக' இருந்துவரும் உள்துறை அமைச்சர் திரு. வை. பி. சவான் பிரதம மந்திரியாக வரக்கூடும் என்றும் அவரது அமைச்சர் அவையில் திருமதி இந்திராகாந்தியும், திரு. மொரார்ஜி தேசாயும் பதவி ஏற்கக் கூடும் என்றும் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிருர்கள்.

# வலதுசாரிகளின் கைஓங்கும்

திரு. கிரி தோல்வியடைந்து திரு சஞ்சீவரெட்டி வெறறி பெறுவாராஞல் காங்கிரஸ் கட்யின் வலது சாரிகளின் கை ஓங்கிவிடும். இதன் காரணமாக திருமதி இந்திரா காந்தியைப் பிரதமர்பதவியிலிருந்துவீழ்த்துவதற்குஅவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும் என்று கருதப்படுகின்றது. இந்தத் தேர்தல் காங்கிரஸ் கட்சிக்குள் இடது சாரிகளுக்கும்- வலது சாரிகளுக்கும் இடையில் ஒரு பலப்பரீட்சையாகவே இருந்தது என்பது வெளிப்படை.

திரு சஞ்சீவரெட்டி காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரம் பெற்ற வேட்பாளராகப் போட்டியிட்ட போதிலும் அவரைத்தேர்ந்தெடுத்தமுறைகுறித்தும் வேட்பாளராக நிறுத்தியதிலும் காங்கிரஸ்கட்சிக்குள்ளேயேஒருமித்த கருத்து இருக்கவில்லை, கட்சிற்குள்ளேயே ஏகோபித்த ஆதரவு பெருதஒருவர் ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால், அவரது நியமனத்தைப் பகிரங்கமாகக் கண்டித்த திருமதி காந்தியின் குழுவினருக்கும் பெருந்தோல்வியாகவிருக்கும். மேலும் திருமதி காந்தி தொடர்ந்து பதவியிலிருப்பதா இருக்க விடுவதா என்ற பிரச்னை எழும். அந்நிலைமையில் திருமதி இந்திரா காந்தி என்ன முறையில் நடந்து கொள்வார் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று அவதானிகள் கருதுகிருர்கள்.

# முதியவர் சைக்கிள் ஓட்டம்

கழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாவது பிரிவினர் நடாத்திய ஐம்பது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான சைக்கிள் மரதன் ஓட்டப் போட்டியில் பொன்னலையைச் சேர்ந்த திரு. எஸ். ஜே. மயில்வாகனம் ஜே. பி. முதலாம் இடத்தைப்பெற்ருர். கடந்த வருடம் நடைபெற்ற போட்டியிலும் இவரே முதற்பரிசைப் பெற்றிருந்தார்.

# [illegible] கலவர வழக்கு

கோட்டை, ஞாயிறு

சங்கானை கலவர கொலை வழக்கு விசாரணை வருகிற மாதம் 19-ம் திகதி கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் ஆரம்பமாகும்.

ஜனவரி மாதம் 14-ம் திகதியன்று வல்லிபுரம் செல்லமுத்து என்பவரைக் கொலை செய்ததாக மூவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையை யாழ்ப்பாணத்தில் நடத்தாமல் கொழும்பில் நடத்த வேண்டுமென்று எதிரிகள் கேட்டிருந்ததைத் தொடர்ந்து இது இங்கு விசாரிக்கப் படுகிறது.

...

# வருடாந்த உற்சவம்

சுழிபுரம், ஞாயிறு

சண்டிலிப்பாய் அங்கணைக் கடவை மீனுட்சி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து பத்துநாட்கள் உற்சவம் நடைபெற்று இம் மாதம் 23-ம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் முடிவடையும்.

# கிரி வெற்றி பெற்ருல் நிலைமை வேறு விதம்

திருமதி இந்திரா காந்தி விரும்புகிறபடி திரு. வி. வி. கிரி வெற்றி பெறும் பட்சத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பாவின் நிலைமை தர்மசங்கடமாகிவிடும் என்று கூறப்படுகின்றது. காங்கிரஸ் உறுப்பினர்கள் அவர் சொல்லுக்கு மீறி கிரிக்கு வாக்களித்திருப்பார்களாஞல் அவர் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றே கருதப்படும் அந்த நிலைமையில் நிஜலிங்கப்பா தமதுபதவியை ராஜினுமா செய்வாரா என்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதே. ஏனென்ருல், திரு. நிஜலிங்கப்பா விட்டுக் கொடுக்காமல், கட்சியின் வேட்பாளர்களுக்கு எதிராக வாக்களித்த உறுப்பினர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க முற்படவும்கூடும். அப்படியாஞல் கட்சியில் பிளவு ஏற்படுவதுதவிர்க்க முடியாமலே போய்விடலாம்.

# மின்சார உபநிலையம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலைப் பகுதிக்கான மின்சாரம் வழங்குவதற்கு இளவாலை பிரதான வீதியில் சென் ஆன்ஸ் தேவாலய வளவில் உப மின்சார நிலையம் அமைப்பதற்கு ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# இசைஅரங்கம்

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்வி இராசரத்தினம் சுப்பிரமணியத்தின் இசைஅரங்கேற்றம் வரும் 22-ம் திகதி வெள்ளிக் கிழமை இராமநாதன் இசைக் கல்லூரி தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில்நடைபெறவிருக்கின்றது.

......

# திருட்டு

அல்லைப்பிட்டி, ஞாயிறு

புங்குடுதீவு கிழக்கிலுள்ள நெசவு நிலைய மொன்றில் இரவில் திருடர்கள் புகுந்து பல பெறுமதிவாய்ந்த புடவைகளைத்திருடிச்சென்று விட்டனர். இது சம்பந்தமாக விசாரணை நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தேசங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று சுரண்டுவதை நிறுத்தினாலொழிய உண்மையான ஆயுத ஒழிப்பு நடைபெறாது. — மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 2-ந் திகதி (18 - 8 - 69)


## உள்ளூராட்சி மன்றங்கள்

உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புதிய வருமானங்களைத் தேடித்தர அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் மத்திய அரசாங்கத்தின் வருமானங்கள் சிலவற்றை உள்ளூராட்சிமன்றங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கவிருப்பதுதான் அரசாங்கத்தின் திட்டமென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். ரேமதாசா ஆட்சிமன்றத்தில் வரவு—செலவுத் திட்ட விவாதத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார். இது பலருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

உள்ளூராட்சி அமைச்சராகப் பதவியேற்றபின் நாட்டின் 22 மாவட்டங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து அப்பகுதி மக்களின் குறைகளையும் அப்பகுதி உள்ளூராட்சிமன்றங்களின் நிலைமைகளையும் நேரில் அறிந்து ஆராய்ந்தவர் திரு. பிரேமதாசா. எதையும் உடனுக்குடன் சுறுசுறுப்பாகச்செய்து முடிக்கக்கூடியவர் என்றும் ஆற்றல்வாய்ந்தவர் என்றும் ஆட்சிமன்றத்திலேயே பலரும் அவருக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கின்றனர். உள்ளூராட்சிசேவையின் மூலம் தான் அவர் அரசியல்வாழ்வு தொடங்கியது. உள்ளூராட்சிமன்றங்களின் நிலைமை அவர் நன்கறிந்தவர். எனவே உள்ளூராட்சிஅமைச்சராக அவர் பதவியேற்றதும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நல்லகாலம் பிறக்குமென பலரும் எதிர்பார்த்தனர். அது வீண்போகமாட்டாதென்று நம்ப இடமுண்டு. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா உள்ளூராட்சி மன்றங்களின் தந்தைஎன்று பெயர் பெற்றவர். இப்போது ஓரளவு அதிகாரம் பெற்றிருக்கிறதென்றால் அதற்கு அவர் தான் காரணம். இதைவிட மேலும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்பது அவர் விருப்பம். நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருக்கக்கூடாதென்பது அது பரவலாக்கப்படவேண்டுமென்பதும் இன்றைய அரசாங்கத்தினதும் கொள்கைகளாக இருந்தன. உத்தேசித்திருந்த பிரதேச சபைகளை அரசியல் காரணங்களுக்காக எதிர்த்தபோதிலும் அதிகாரங்களைப் பங்கிட வேண்டுமென்பதற்காக இன்றைய அரசாங்கமும் மாவட்ட சபைகள் அமைக்க முன்வந்தது. அதுவும் அரசியல் காரணங்களால் முடியாமல் போய்விட்டது. சோஷலிஸ நாடுகளிலும் சரி ஜனநாயக நாடுகளிலும் சரி உள்ளூராட்சிமன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதால் தான் அவை பொருளாதாரத்திலும் முன்னேற்றமடைந்திருக்கின்றன.

இந்தியா சுதந்திரமடைந்துவிட்டபோதிலும் அதற்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லையென்றும் பஞ்சாயத்துக்கள் சுயாட்சி பெற்று இயங்கும் நாள்தான் இந்தியாவுக்கு உண்மையானசுதந்திரம் கிடைத்ததாக ஆகுமென்றும் பூதான இயக்கத் தலைவர் வினோபா பாவே கூறியிருக்கிறார் மத்திய அரசாங்கத்தில் அதிகாரங்கள் யாவும் குவிந்து கிடப்பதும் ஒரு சில அதிகாரங்களை மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை ஆகியவைகளுக்கும் மத்திய அரசாங்கம் கிள்ளிக் கொடுப்பதும் நிர்வாக அதிகாரப் பங்கீடாகவோ, உண்மையான சுதந்திரமாகவோ அர்த்தப்படமாட்டா.

கல்வி, சுகாதாரம், கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் ஆகியவைகளின் பொறுப்புஉள்ளூராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் இவைகளில் வீண்குழப்பமும் ஏற்படா, மத்திய அரசாங்கத்துக்கு வீண்சிரமமும் ஏற்படமாட்டாது. மத்திய அரசாங்கத்துக்கு வரும் வருமானத்தில் ஒரு பகுதியை உள்ளூராட்சி மன்றங்களுக்கென ஒதுக்குவது நல்லதுதான். ஆனாலும் வருமானத்தைத் திரட்டி பின்னர் பங்கிட்டுக் கொடுப்பதைவிட சிலசில பெட்டிப்புக்களை அந்தந்தமன்றத்திடம் விட்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கு அவற்றுக்கு அதிகாரமும் வழங்கினால் கிராமம், பட்டினம், நகரம் என

ஆட்சிமன்றத்திலே

நமது சபை நிருபர் பெரி. சுந்தரலிங்கம்

# டட்லி காலத்தில் வேலையில்லாதோர் பட்டியல் கூடியதற்கு காரணம் ஆட்சிமன்றத்தில் சுவாரஸ்ய விளக்கம்

வரவு செலவுத் திட்ட விவாதத்தின் நான்காம் நாள் விவாதம் ஆமை வேகத்தில் தான் முன்னேறியது. அரசாங்க, எதிர்க்கட்சிப் பிரசாரப் பீரங்கிகளின் தாக்குதலைச் சமாளிக்க முக்கியமானவர்கள் எல்லோரும் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பது போல் பெரும்பாலும் அரசாங்கத் தரப்பினதும், எதிர்க்கட்சித் தரப்பினதும் முன்வரிசை ஆசனங்கள் காலியாகவே கிடந்தன. சபை நிகழ்ச்சிகள் 8 மணியளவில் முடிந்தபோது எதிர்க்கட்சி ஆசனங்களில் மினுவாங்கொடை எம். பி. திரு. எம். பி. டி. இஸட். சிறிவர்த்தனவைத் தவிர வேறு ஒருவருமே இருக்கவில்லை என்றால் பார்த்துக்கொள்ளலாம்.

இதைப் 'பயன்படுத்திக் கொண்டு அரசாங்கக் கட்சி எம். பி. திரு. ஜி. எம். ரி. பண்டா பேசுகையில், அரசாங்கக் கட்சியினராகிய எங்களின் ஆணித்தரமான வாதங்களுக்குத் தக்க பதிலளிக்க முடியாமல் எதிர்க்கட்சியினர் சகலருமே புறமுதுகு காட்டி ஓடிவிட்டார்கள். பாவம், மினுவாங்கொடை எம். பி. மாத்திரம் தான் இருக்கிறார். அவர் கூட அடுத்த தேர்தலில் தப்புவாரா என்பது சந்தேகம் தான்'' என்று ஒரு போடு போட்டு வைத்தார்.

சிற்சில சமயங்களில் முன்வரிசை ஆசனப் பேச்சாளர்களைவிட பின்வரிசை ஆசனப் பேச்சாளர்களின் பேச்சுக்கள் கேட்க ருசிகரமாக-ஜனரஞ்சகமாக இருக்கும். முந்திய விவாதத்தில் நியமன எம். பி. திரு. வி அண்ணாமலையின் பேச்சு ஜனரஞ்சகமாக இருந்தது என்றால் திரு. ஜி. எம். ரி பண்டாவின் பேச்சைத் தான் அந்தப் பட்டியலில் சேர்க்கவேண்டும்

சபையில் எஞ்சியிருந்த பத்துப் பன்னிரண்டு எம். பிக்களும் கொட்டாவி விட்டுக்கொண்டு எப்பொழுது சபை ஒத்திவைக்கப்படும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோது 7-20 மணியளவில் எழுந்து சபையில் சுறுசுறுப்பை உண்டாக்கினார், திரு. ஜி. எம். ரி. பண்டா.

1965-ம் ஆண்டுக்குப் பிறகு வேலை தேடித் தரும் நிலையங்களில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெருந்தொகையினர் பதிவு செய்துகொண்டிருப்பதால் 1965க்குப் பின் தான் வேலையில்லாப் பிரச்னை விஸ்வரூபமெடுத்திருக்கின்றதென்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியமைக்கு திரு. ஜி. எம். ரி. பண்டாவின் பதில் இதுதான்.

''1965க்கு முன் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் பதிவு செய்தவர்களுக்கே வேலை கிடைக்காததால் ஒருவரும் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லாமல் பதிவு செய்யவில்லை. ஆனால் 1965க்குப் பின் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்தன் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து ஏராளமானோருக்கு வேலை கிடைத்திருப்பதால் அதிகமானோர் வேலை கேட்டுப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் 1965க்குப்பின் பதிவு செய்துகொண்டிருப்பவர்கள் எல்லாரும் 1965க்குப் பின் பிறந்தவர்கள் அல்லர், அவர்கள் 1965க்கு முன்பே வேலையில்லாது இருந்தவர்கள் தாம்!

பண்டாவின் இந்தப் பதிலடிக்கு பலம் கொடுக்கும் வண்ணம் நிதியமைச்சர் திரு. வன்னிநாயக்காவும், இதர அரசாங்கத் தரப்பு எம். பிக்களும் கைதட்டி ஆரவாரம் செய்ய திரு. பண்டா தொடர்ந்து எதிர்க்கட்சிகளைச் சாடினார்.

மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டத்தைக் கேலிசெய்கிறார்கள். நாங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான் போகிறோம்! மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் திட்டம் வெற்றியடையும் போது மிகிந்தலை, அநுராதபுரம் மதவாச்சிய (எதிர்க்கட்சி ஆசனங்கள்) எம். பிக்களையும், மகாவலி கங்கையின் வெள்ளம் அப்படியே அடித்துக்கொண்டு போய் விடும் என்று அடித்துச் சொல்லிமீண்டும் 'அப்ளாஸ்' பெறுகிறார் பண்டா!

இவருக்கு முன்பேசிய அம்பாறை எம். பி. திரு. சோமரத்ன, தன்னிடம் கால் ஏக்கர் காணிகூட இல்லையென்றும், தான் அன்றாடம் கடைகளிலேயே தேங்காய், சீனி, மிளகாய், உப்பு அரிசி ஆகிய பொருள்களை விலைக்குவாங்கி ஜீவனோபாயம் நடத்துவதால் தனக்குச் சாதாரண மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்கள் தெரியும் என்று நிலைநாட்ட முயற்சித்தார்.

தன்னிடம் 'கால் ஏக்கர் காணிகூட இல்லை' என்று அம்பாறை எம் பி. சொன்னதைப் பிடித்துக்கொண்டார். பண்டா 'கால் ஏக்கர் காணிகூட இல்லாத இந்த எதிர்க்கட்சி எம். பி உணவு விளைச்சலில் ஈடுபடப்போகிறேன் என்று அரசாங்கத்தை ஏமாற்றி 'ஜீப்' பொன்றைப் பெற்றிருக்கிறாரே! எப்படி இவரது செப்படி வித்தை? என்று மடக்கினார். அரசாங்கத்தரப்பு எம். பிக்களின் ஆரவாரம் அடங்குவதற்கு வெகு நேரம் ஆயிற்று.

### பொத்துவில் எம்.பியும் பொன்னம்பலமும்

பொத்துவில் எம். பி. திரு. எம். எம். முஸ்தபாவுக்கு திரு. ஜி ஜி. பொன்னம்பலம் இரண்டாம் நாள் விவாதத்தின்போது பேசிய சில பேச்சுகள் பிடிக்கவில்லை பட்டதாரி விஞ்ஞான ஆசிரியர்களில்-தமிழில் படிப்பிப்போரில் பெரும்பாலானோர் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தான்வருகின்றனர். எனவே அவர்களைக் கொண்டுதான் மட்டக்களப்பு, பொத்துவில் அம்பாறை போன்ற பகுதிகளில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளிலும் போதிக்க வேண்டியிருக்கிறது. நிலைமைஇப்படியிருக்க யாழ் மாவட்ட பட்டதாரிகள் கிழக்கு மாகாணத்தில் வந்து வேலைசெய்ய விரும்புகிறார்களில்லை. அவர்களைக் கட்டாயப்படுத்தி கல்வி அமைச்சர் இடமாற்றம் செய்தாலும், திரு ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றோர் இந்த ஆசிரியர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பிரதம மந்திரி வரைக்கும் சென்று வாதிடுகிறார்கள்?'' இதுதான் பொத்துவில் எம். பி. முஸ்தபா புகாரின் சாராம்சம்!

இதற்கு அவர் கூறும் பரிகாரம் இதுதான்! இனிமேல் யாழ். மாவட்ட பட்டதாரிகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலைசெய்யத்தயங்கினால் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளையே, பிராந்திய அடிப்படையில் தேர்ந்தெடுத்து. அந்த பகுதி பாடசாலைகளுக்கு நியமிக்கும்படி கேட்பேன்.

காந்திஜி பெயரால் ....

# பனைவளர்ப்போம்; பயன் பெறுவோம்

அகில இலங்கை காந்தி ... ஏற்பாடு செய்திருக்கின் ... களிலும் நாட்டவேண்டு ...

### சங்காபிஷேகம்

சுன்னாகம், ஞாயிறு

சுன்னாகம் அண்ண மகேஸ்வரர் ஆலயத்தில் சங்காபிஷேகம்நடைபெற்றது. பகல் விசேட ஆராதனையும், அன்னதான வைபவமும்இரவுகதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# முருக சிந்தனை

(சங்கீத பூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி)

சந்த விருத்தம்

அரன முற்பொறி யசுர ரற்றிட
அழகு மிக்கறு சிசுவெனச்
சரவ ணைத்தல வனச மத்தியில்
சயன மற்புத மதுதரக்
கருணை மிக்குள உமைம லர்க்கர
மதுவ ணைத்திட வறுவுரு
பெருவி யப்புற அறுமு கத்தொடு
ஒருவு றுப்பெறு முருகனே

உனையு ளத்தினில் நினைதி றத்தவ
ரிடர் விர்த்தரு ளுபவ என்
வினைத விர்த்தருள் புரிதல் நற்கடன்
விடிலெ னக்குறு துணையிலை
செனன மிச்செக மதிலெ டுத்துழல்
மயல்மி குத்திடு சிறிய னென்
மனதி னிற்குடி வருக வெற்பது
பொடிப டச்செயு முருகனே

குறுமு னிக்குமுன் தமிழு ரைத்தவ
குறம கட்கிசை தலைவநற்
சிறைவி ரித்துநின் றெழில்ந டத்தினை
யிடும யிற்பர வருகந்ன்
அருளி னைக்கொடு அகவி ருப்பொடு
அடிமை நித்தமும் துதிசெய
குறைய கற்றிடு குழக நித்திய
குமர அற்புத முருகனே

உலகி லெத்தனை சுகமி ருப்பினு
முயிர் னுக்கினி திவையிலை
பலநி தித்திரள் பதவி மற்றவர்
பணிய நித்தமு முறையிலென்
வலிமி குத்திடு மறலி முற்பட
விடுப டச்செய வலியிலை
மலர டிச்சுக மதைய ளித்திடு
மனதி னைக்கவர் முருகனே

## தமிழ்சொன்னதெய்வம்

—நிலவின் தாசன்—

தெள்ளு தமிழ் மொழிபேசும் கன்னல்நகர் நற்றமிழர்
சிந்தையிலே நின்றாடும் அருளாளன் அவன்
வள்ளிதெய்வ யானையுடன் வந்துநின்று காட்சிதந்து
அல்லல்களை மாய்த்த மர்ந்த நல்லூரான்

அல்லும்பக லவன்நாமம் சொல்லுவதில்பெருமின்பம்
கொள்ளுகிற பலர்காணும் நல்லூரான் — ஒளி
மின்னிமன மாசறுக்கும் வல்லதங்க வேலவனின்
நல்லவருட் பாங்கு சொல்லும் நல்லூராம்

நங்கைகொள்ளும் நாற்குணமும் நல்லவேந்தர் நாற்படையும்
நல்லைநகர் வேலதற்கே அடக்கமெடா — அதைத்
தங்கவிடு மனந்தனிலே சங்கதியை யுணர்ந்து விடு
தம்பிதமிழ் சொன்ன தெய்வம் முருகோனே

கோட்டை புகையிரத நிலையத்தில்

## களவாடிய பொருட்களுடன் ஓடிய ஜோடி கைதானது

மீதோட்டமுல்லை, ஞாயிறு

வீட்டில் எஜமானர் இல்லாத சமயம் வீட்டில் இருந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு இரத்தினபுரிக்கு புகைவண்டிமூலம் தப் ... இருந்தே வேலை செய்துவந்த சுமார் 18 வயதான சிரியா என்னும் பெண்ணும் அவளுடன் காதல் தொடர்பு கொண்டதாகக்காணப்படும் பக்கத்து வீட்டு வாலிபனை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் காரணம். இதைவிட மேலும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்பது அவர் விருப்பம். நிர்வாகம் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாதென்பது அது பரவலாக்கப்படவேண்டுமென்பதும் இன்றைய அரசாங்கத்தினதும் கொள்கைகளாக இருந்தன. இதனுல்தான் திரு. பண்டாரநாயக்கா கொண்டுவர கெண ஒதுக்குவது நல்லது தான். ஆனுலும் வருமானத்தைத் திரட்டி பின்னர் பங்கிட்டுக் கொடுப்பதைவிட சிலசில பெற்றுப் புக்களை அந்தந்தமன்றத்திடம் விட்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கு அவற்றுக்கு அதிகாரமும் வழங்கினுல் கிராமம், பட்டினம், நகரம் என நாடே விருத்தியடையும்.

## "ஆயுள் காலம் வரை பசியை போக்க வழி"

### அமெரிக்கா செல்லும் அங்கவீனர் பாடசாலை அதிபர் கூறுகிறுர்

நல்லூர், ஞாயிறு

கடந்த 10 வருடங்களாகக் கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலையின் அதிபராகவிருந்த திரு டி. எஸ். அம்பலவாணர் நியூயோர்க்கிலுள்ள லெக்சிங்ரன் செவிடர் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரியவும் இத்துறையில் மேலும் பாண்டித்தியம் பெறவும் அமெரிக்காவுக்குச் செல்வதனுல் தமதுபதவியிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி அவருக்கு பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

அமெரிக்கா செல்லும் திரு. அம்பலவாணர் நன்றி தெரிவித்துப் பேசும்போது கூறியதாவது:

எனது சிறுவயது முதல் குறைவுள்ளோருக்குச் சேவைசெய்வதையே ஆசையாகக் கொண்டபடியால் இப்பாடசாலையில் சேவை செய்வதை ஒரு பெரும் வாய்ப்பாகக் கொண்டேன் ஆனுல் இதற்கு தியாகம் என்றே அல்லது பெரிய பிரச்னையுள்ள டினமான சேவையென்றே அதற்காக நான் பாராட்டப்படவேண்டுமென்றே விரும்பவில்லை. ஒருவனுக்கு உணவை மட்டும் அளித்தால் அன்று மட்டுமே அவன் பசியைத் தீர்க்கிறேம். ஆனுல் அவனுக்கு உணவை உற்பத்தியாக்கும் முறையையோ, எப்போதும் பெற்றுக்கொள்ளும் முறையையோ கற்பித்துக்கொடுத்தால் ஆயுட்காலம் வரையும் அவன் பசியைத் தீர்த்து விடுகிறேம். உங்கள் பிள்ளைகள் ஆயுள்காலம் வரைமற்றவர்களின்கையை எதிர்பாராது வேண்டுதல் செய்யாது தன்மானத்தோடும் பெருமையோடும் சுயாதீனமாக வாழ வழி தேடக் கற்பித்தலையே இப்பாடசாலையில் செய்கிறேம்.

குருடர், செவிடர், ஊமையர் என்றுல் எல்லோரும் வாரி வழங்குவார்கள் என்ற ஒரு தப்பபிப்பிராயம் பலரிடம் உண்டு. ஆனுல் எனது பத்துவருட அனுபவத்தில் அப்படி ஒருபோதும் இல்லையென்றே துணிந்து கூறமுடிகிறது

தமக்குப் பிரதிபலன் அல்லது புகழ் அளிக்கக்கூடிய நிறுவனங்கட்கே தற்பொழுதும் எப்பொழுதும் மக்கள் பணஉதவி ஊக்கம் முதலியன அளித்து வருகின்றனர். உங்கள் பிள்ளைகட்கு அப்படி எல்லோரும் அளிப்பார்களென்று எதிர்பார்க்கவேண்டாம். ஆனுல் கிடைக்கும் உதவியையும் வாய்ப்பையும் பயன்படுத்தி உங்கள்பிள்ளைகளைத் தம்காலத்தில் தாமே பெருமையாகவும் சிறப்பாயும் வாழத்தக்கதாக உங்கள் உதவியையும் ஊக்கத்தையும் இப் பாடசாலைக்கு அளித்து இப்பாடசாலையை வளர்க்க வேண்டும்.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சுண்டுக்குளி சிவநெறிமுன்னேற்றக் கழகத்தின் கூட்டுப்பிரார்த்தனை ஆண்டு விழா ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் பெருமான் ஆலயத்தில் நடைபெற்வது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் கதாப் பிரசங்கம் ஜெயா சௌந்தரநாயகத்தின் இன்னிசை ஆகியன நடைபெற்றன. தேவாரப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு கழகப் போஷகர் திரு. சு. சோமசுந்தரம் பரிசில்கள் வழங்கினுர். திரு. இ.சு. மணிஐயர் இந்த நிகழ்ச்சிகளைநடாத்தி வைத்தார். (கா. நி)

# பனைவளர்ப்போம்; பயன் பெறுவோம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் 1950-ம் ஆண்டு தொடக்கம் பனை விதை நாட்டும் இயக்கத்தை பனை மகோற்சவமாகக் கொண்டாடி வருகின்றது.

இந்த வருடம் காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு பனைவிதை நாட்டும் இயக்கத்தை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் விரிவு படுத்தி உள்ளது. இலங்கையின் 22 மாவட்ட அரசாங்க அதிபர்களுடனும் சங்கம் தொடர்பு கொண்டு செப்டெம்பர் 1-ம் திகதி தொடக்கம் ஒக்டோபர் 2-ம் திகதி வரையும் பனம் விதை நாட்டும் இயக்கத்தை சங்கம் சிறப்பாககி உள்ளது.

அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர் 1000 மாணவர்களது உதவியுடன் சிரமதான முறையில் 30,000 பனம் விதைகளை

சி. க.வேலாயுதபிள்ளை
(காந்திநிலயம், உருத்திரபுரம்)

நாட்டத் திட்டமிட்டுள்ளார். இந்த இயக்கத்தை உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயக்கா ஆரம்பித்து வைக்கின்றுர்

வடபகுதியில் உள்ள கிளிநொச்சி, துனுக்காய் முதலிய குடியேற்றப் பகுதிகளில் பனம் விதைகளை வெற்றிடங்களிலும் வேலி எல்லைகளிலும் நாட்ட சுமார் 2 லட்சம் பனம் விதைகள் வேண்டும். இவற்றைச் சேகரிக்கவும் விநியோகிக்கவும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சுமார் ஒரு லட்சம் பனம் விதைகளை நாட்ட காந்தி நூற்றுண்டு மாவட்ட சபையின் உதவியுடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் காந்தி நூற்றுண்டு மாவட்ட சபையைக் கூட்டி பனம் விதை நாட்டும் இயக்கத்தை ஆரம்பிக்கின்றுர்.

அளவெட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 5000 பனம் விதைகளை அன்பளிப்பாக அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கின்றது.

வலிகாமம் கிழக்குப் பகுதிக் காரியாதிகாரி நீர்வேலி,-கைதடி பரந்த வெளியில் சுமார் ஒரு லட்சம்பனம் விதைகளை நாட்ட எண்ணியிருப்பதாகவும் இத்திட்டத்துக்கு பாடசாலை மாணவர்கள் சிரமதான மூலம் ஈடுபடவிருப்பதாகவும் தெரியவருகிறது

அகில இலங்கை பனை மகோற்சவத்தைச் சிறப்பான முறையில் கொண்டாட பூரண ஒத்துழைப்பு தருமாறும் இந்த இயக்கத்தில் ஈடுபடுமாறும் அகில இலங்கை காந்திசேவா சங்கம் எல்லாப்பொது ஸ்தாபனங்களையும் வேண்டுகின்றது.

பனம் விதைகளைச் சேகரித்து வெறும் கட்டாந்தரைகளிலும் வெளி எல்லைகளிலும் பாதை ஓரங்களிலும் மற்றும் வெற்றிடங்களிலும் நாட்டவேண்டுமென்றும் பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும்மாணவர்கள் ஆசிரியர்கள் சன சமூக நிலையங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்கள் கிராமசபைகள் கூட்டுறவுச் சங்கங்கள் இத் துறையில் ஈடுபட வேண்டுமென சங்கம் வேண்டுகின்றது. இப்படி பனம் விதைகளை.நாட்டினுல் எதிர்கால சந்ததி பனைகளைக் காணவும் உபயோகிக்கவும் முடியும். இல்லாவிட்டால் 25 வருடத்தில் பனைகளே இல்லாமல் போய்விடலாம்.

பனம்விதைகளை நாட்டுவதால் சிரமம் இல்லை. நீர் ஊற்றி வளர்க்க வேண்டிய சிரமம் இல்லை, அது தானுகவே வளர்ந்து பயன்தரும் கற்பக விருட்சம். காந்தியடிகள் பெயரால் பனைகளை வளர்ப்போம். பயன் பெறுவோம்.

# மழையில் நடந்து வந்தார் மகாத்மா

காந்தீயசீடர் வி. எஸ். அவிநாசலிங்க செட்டியார் றேடியோவில் நிகழ்த்திய உரையொன்றில் மகாத்மாகாந்தி வாழ்ந்தகாலத்தில் தமக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைப் பின்வருமாறு அண்மையில் குறிப்பிட்டார்.

"அப்பொழுது நான் வாலிப வயதினன். மகாத்மாஜி மிகவும் பின்தங்கிய கிராமமான வார்தாவில் ஆச்சிரமம் நிறுவிக்கொண்டு அங்கு பொதுப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். வண்டி போக்குவரத்தோ டெலிபோன் வசதியோ கிடையாத ஊர் அது. நான் மகாத்மாவைச் சந்திப்பதற்காகச் சென்று அரியநாயகத்தார் வீட்டில் தங்கினேன். அங்கிருந்து மகாத்மா இருக்கும் இடத்துக்கு ஆறு மைல் தூரம். வண்டிகள் கிடையாது. மழை தூறிக்கொண்டிருந்தது. இந்த ஆறு மைலையும் புழுதி ரேட்டில் எப்படி நடந்து போவது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். ஒரே மலைப்பாக இருந்தது. அப்பொழுது மகாத்மாவே அங்கு வந்து கொண்டிருப்பதாக அரியநாயகத்தார் கூறினுர். நான் பார்த்தேன். ஆம் கருணுமூர்த்தியான மகாத்மாவே மழையில் குடையொன்றைப் பிடித்துக் கொண்டு சகதியில் கால்கள் புதைய அரையில் துண்டு வேட்டியுடன் வந்துகொண்டிருந்தார்.

நோயாளீ ஒருவர் மகாத்மாவைப் பார்க்க வேண்டும் என்று விரும்பியிருக்கிறுர். நடக்கமுடியாத அந்த நோயாளியைப் பார்த்துவிட்டுப் போவதற்காக தள்ளாத வயதையும் பொருட்படுத்தாமல் மகாத்மா மழையில் நடந்துவந்திருக்கிறுர்.

எனக்கு வெட்கமாக இருந்தது. வாலிபனுன நான் இந்த ஆறு மைலை நடந்து போவதற்கு தயங்கிக் கொண்டிருக்கும்போது வயது முதிர்ந்த அவர் ஆறு மைல் தொலைவை நடந்து வந்திருப்பது மட்டுமல்ல மீண்டும் திரும்பி நடந்தே போனுர். அதற்குப் பிறகும் என்னுல் நடக்காமல் இருக்கமுடியுமா?"

கேட்டு எழுதியவர்: பேறு

சுன்னுகம், ஞாயிறு

சுன்னுகம் அண்ண மகேஸ்வரர் ஆலயத்தில் சங்காபிஷேகம்நடைபெற்றது. பகல் விசேடஆராதனையும், அன்னதான வைபவமும்இரவுகதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## பண்ணிசை

அராலி, ஞாயிறு

அராலி தெற்கு கரைப்பிட்டி விநயகர் ஆலயத்தில் இம்மாதம் 20-ம் திகதிமாலை காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனஓதுவாமூர்த்தி ஏ.எஸ் இராஜசேகரனின் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. இவ்வாலய உற்சவம் நாளை ஆரம்பமாகிறது.

## தான்தோன்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அவதூறு வழக்கொன்றில், கிராமசபைத் தலைவர் ஒருவரைப் பார்த்து சாவகச்சேரி மாவட்ட நீதவான் திரு. ரி. எம். தருமலிங்கம் எச்சரிக்கை செய்தார்.

இந்த வழக்கில், கடந்த டிசம்பர் மாதம் 1968-ம் ஆண்டு, செம்பியன் பற்று கிராமசேவையாளர் எஸ். எஸ். சின்னத்தம்பி, பாடசாலை மாணவர்கள் களை பிடுங்கும் ஆரம்ப விழா பற்றியும், களை கொல்லி, கிருமிநாசினி தெளிக்கும் நடைமுறைக் காட்சி பற்றியும் அறிவிக்கும், விளம்பர நோட்டீசை செம்பியன் பற்றில்விநியோகம் செய்து கொண்டிருக்குபோது அவரை அவரது கடமையைச் சரிவரச் செய்யவிடாது தடுத்ததாகவும், அவரை அவதூருக ஏசி அவமானப்படுத்தியதாகவும் செம்பியன்பற்று கிராமசபைத் தலைவரான சின்னக்குட்டி முத்தையாவுக்கு எதிராககுற்றஞ்சாட்டிபளைப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கை சாவகச்சேரிமாவட்டநீதவான் திரு. ரி. எம். தருமலிங்கம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். விசாரணையின்போது எதிரியான கிராமசபைத் தலைவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் கிராமசபைத் தலைவர் பதவிஇருப்பதினுல் தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு சட்டம் அனுமதிக்காது, என்று கூறிய நீதிபதி இனிமேலும் இப்படி ஏதாவது ஏற்பட்டால் கடுமையான தண்டனை கிடைக்கும் எனத்தெரிவித்து கிராமசேவையாளரிடம் மன்னிப்புக் கேட்கும்படி உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

## ஓடிய ஜோடி கைதானது

மீதோட்டமுல்லை, ஞாயிறு

வீட்டில் எஜமானர் இல்லாத சமயம் வீட்டில் இருந்து அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு இரத்தினபுரிக்கு புகைவண்டிமூலம் தப்பித்துச் செல்லவிருந்ததாகக் கூறப்படும் ஒரு வீட்டு வேலைக்காரக் காதல் ஜோடியைப்பொலிசார் கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்து கைது செய்தனர்.

தெமட்டக் கொடையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் வீட்டில் சிறுவயதில் இருந்தே வேலை செய்துவந்த சுமார் 18 வயதான சிரியா என்னும் பெண்ணும் அவளுடன் காதல் தொடர்பு கொண்டதாகக்காணப்படும் பக்கத்து வீட்டு வாலிபனுன லத்தினு என்பவரும் தெமட்டைக் கொடைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி அவர்கள் இருவரையும் 14 நாள் றிமாண்டில் வைக்கும் படி உத்தரவிட்டார். (வி. நி)

## கலைவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் இம்மாத பௌர்ணமிக்கலைவிழா 27ம்-திகதி இரவு யாழ். திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது, தேன்மதி கலாலயம் அளிக்கும் 'சந்திரனில் நால்வர்' நகைச்சுவை நாடகம், அரியாலை திடீர் நாடக மன்றத்தின் 'அபசகுனம்' சமூகநாடகம் மட்டக்களப்பு ஜெயம் கித்தார் குழுவின் வாத்திய இசை ஆகியன. விழாவில் இடம்பெறும். (கா. நி)

## பொன்விழா

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி தமிழ் மன்றம், வதிரி டயமண்ட் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50-வது வருட பொன்விழா கடந்த 12-ம் திகதி முதல் கொண்டாடப்பட்டுவருகின்றது. அடுத்தமாதம் 3-ம் திகதி வரைநடைபெறவிருக்கும் இவ்விழாவில் உதைபந்தாட்ட, கரபந்தாட்ட, நாடகப்போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

## நல்லூரில் 20பொலிசார் கடமையாற்றுவர்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு நிறுவப்பட்டிருக்கும் பொலிஸ் நிலையத்தில்ஊர்காவற்றுறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராசையா தலைமையில் 20 பொலிசார் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளனர். (கா நி)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு மகா கணபதிப் பிள்ளையார் வருடாந்த உற்சவம் இன்று நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

## பகற்கொள்ளை

மீதோட்டமுல்லை, ஞாயிறு

பட்டப்பகலில் காரில் சென்றுகொண்டிருந்தஒருவரிடம் ரூபா 4500 கத்திமுனையில் கொள்ளையடிக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம்ஊறுநடவத்தைச் சந்தியில் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

வர்த்தகவிஷயமாக பணத்துடன் காரில் சென்ற மருதானை பிரபல வர்த்தகர்ஒருவரை ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று கொலைசெய்து விடுவதாக் பயமுறுத்தி பணத்தை கொள்ளை அடித்துச் சென்றதாக தெமடக்கொடை பொலிசாரிடம் புகார்செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் தெமட்டகொடையைச் சேர்ந்த திரு. காதர், திரு. நூர்டீன், திரு. தர்மி ஆகியோரை சந்தேகத்தின் பேரில்கைதுசெய்துள்ளனர்.

## விவசாயிகள் ஏமாற்றம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வாய்க்கால்மூலம்ஆற்றுநீர் இளம் விவசாயிகளின் பண்ணைக்கு வழங்கப்படாததால் கனகபுரம் இளம் விவசாயிகளின் நிலங்கள் வரண்டு போய்க்கிடக் கின்றனவாம். இவ்விவசாயத்திட்டக் கிணறுகளிலும் தண்ணீர் வற்றிப் போய்விட்டதால் பெரும்பாலான இளம் விவசாயிகள் தமதுஊர்களுக்குத் திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளது.

## சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு திவ்ய ஜீவன சங்க யாழ்ப்பாணக் கிளையின் நல்லூர் வடக்கு வீதியில் முதல் சிகிச்சை நிலையம் ஒன்றை அமைத்துள்ளனர். (கா. நி)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org